பகுதி IV

பகுதி IV

மத்திய வங்கியினதும், இலங்கையிலுள்ள வங்கித் தொழில் நிறுவனங்களினதும் கடமைகளும், தொழிற்பாடுகளும் தொடர்பான 1998ஆம் ஆண்டின் முதன்மைச் சட்டவாக்கங்கள்

1. 1998ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, தேசிய பணச் சட்ட (திருத்தச்) சட்டம் I

2. 1998ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரி (திருத்தச்) சட்டம் II

3. 1998ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டு (திருத்தச்) சட்டம் XIII

4. 1998ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் XIV

5. 1998ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க மொத்த விற்பனை வரவு வரி (திருத்தச்) சட்டம் XVII

6. 1998ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க, வரி மற்றும் வெளிநாட்டுச் செலாவணி மன்னிப்புச் சட்டம் XX

7. 1998ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம் XXVII

8. 1998ஆம் ஆண்டின் 61ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் L

9. 1997ஆம் ஆண்டின் 63ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம் LIII

1998ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, பணச் சட்ட (திருத்தச்) சட்டம்

[1998ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

பணச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச் சட்டம் 1998ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, பணச் சட்ட (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பணச் சட்டத்தின் 52ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டத்தின் பிரிவு 52அ என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும்:-

"ஞாபகார்த்த நாணயத் தாள்கள் அல்லது நாணயக் குற்றிகள் வழங்கல்"

52அ. (1) (அ) மத்திய வங்கியானது, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்துடனும் 53ஆம் பிரிவிற்கு அமையவும், ஞாபகார்த்த நாணயத் தாள்களை அல்லது நாணயக் குற்றிகளை வழங்கலாம்.

(ஆ) இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஞாபகார்த்த நாணயத் தாள்கள் அல்லது நாணயங்கள்

அத்தகைய நாணயத் தாள்களிலும் நாணயக் குற்றிகளிலும் குறித்துரைக்கப்பட்ட பெறுமானத் தொகையை விடக் கூடுதலானதும் அத்துடன் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் தீர்மானிக்கப்பட்டதுமான விலையொன்றுக்கு விற்கப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஞாபகார்த்த நாணயத்தாள் அல்லது நாணயக்குற்றி ஒன்றை அத்தகைய நாணயத்ததாளில் அல்லது நாணயக்குற்றியில் குறித்துரைக்கப்பட்ட பெறுமானத் தொகையைவிடக் கூடுதலான விலையொன்றுக்கு விற்பனை செய்தலானது, 58அ என்னும் பிரிவின் மீறுகையொன்றாகக் கருதப்படுதல் ஆகாது.

(3) இப்பிரிவில் ஞாபகார்த்த நாணயத்தாள் அல்லது நாணயக்குற்றி என்பது எவரேனும் ஆளை அல்லது விசேட சம்பவமொன்றை நினைவுகூருவதற்காக வழங்கப்பட்டவொரு நாணயத்தாள் அல்லது நாணயக்குற்றி எனப் பொருள்படும்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 55ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவை 55ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன்மூலமும்:-

(2) மீள இலக்கமிடப்பட்ட அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் "எவரேனும் ஆளினால் மத்திய வங்கிக்கு ஒப்படைக்கப்படுவதன்மீது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எவரேனும் ஆளினால், (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய மத்திய வங்கிக்கு ஒப்படைக்கப்படுவதன்மீது" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) மீள இலக்கமிடப்பட்ட அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும்:

"(2) ஓராம் உட்பிரிவிலுள்ள எதுவும், தேவைப்படுத்தப்பட்ட நாணயத்தாள் அல்லது நாணயக்குற்றி அத்தகைய நாணயத்தாளில் அல்லது நாணயக்குற்றியில் குறித்துரைக்கப்பட்ட தொகையினதொன்றாக இருக்குமிடத்து, 52அ என்னும் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் ஞாபகார்த்த நாணயத்தாளை அல்லது நாணயக் குற்றியை, (1)ஆம் உட்பிரிவின் கீழான கோரிக்கையின்மீது ஒப்படைக்குமாறு மத்திய வங்கியின்மீது கடப்பாடொன்றைச் சுமத்துவதாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதலாகாது.".

4. இச்சட்டத்தின் 2ஆம் 3ஆம் பிரிவுகளால் முதன்மைச் சட்டவாக்கத்திற்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 1998 பெப்புருவரி 4ஆம் தேதியன்று வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் 1998 பெப்புருவரி 4ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னரும் அத்துடன் இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னரும் வழங்கப்பட்ட அல்லது விற்கப்பட்ட ஏதேனும் ஞாபகார்த்த நாணயத்தாள் அல்லது நாணயக்குற்றி, எல்லா நோக்கங்களுக்காகவும் சட்டமுறையாக வழங்கப்பட்டுள்ளதாகவும், வழங்கப்படுவதாகவும் அல்லது விற்கப்பட்டுள்ளதாகவும் விற்கப்படுவதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

5. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஒவ்வாமை எதுவும் ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

1998ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரி (திருத்தச்) சட்டம்

[1998ஆம் ஆண்டு மார்சு மாதம் 31ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

1996ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 1998ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் அமைச்சரால் கசெற்றில் வெளியடப்படும் கட்டளையின்மூலம் நியமிக்கப்படக் கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1996ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரிச் சட்டத்தின் 2ஆம் பிரிவு, அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(3) பண்டங்களின் இறக்குமதி மீதான வரி, அது சுங்கத்தீர்வையொன்று என்றாற்போன்றும் அத்துடன் இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்ட எல்லாப் பண்டங்களும், தீர்வை விதிக்கப்படற்பாலவையும் சுங்கத் தீர்வைக்கு உட்பட்டவையும் என்றாற்போன்று இறுக்கப்படுதலும் அறவிடப்படுதலும் சேகரிக்கப்படுதலும் வேண்டும். இவ்வேற்பாடுகள் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி சுங்கப் பிணையத்திலுள்ள இடப்பரப்பிற்குள் உட்புகுந்துள்ள எவையேனும் பொருட்களுக்கு ஏற்புடையனவாகமாட்டா:

ஆயினும், எவ்வாறாயினும், உற்பத்தியின் நோக்கங்களுக்கென பயன்படுத்தப்படுவதற்கான பொருட்களை இறக்குமதி செய்பவரும் அவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்பவருமான பதிவு செய்யப்பட்ட ஆளொருவரால் அல்லது 22ஆம் பிரிவின் (6)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வேறு எவரேனும் ஆளினால் இறக்குமதி செய்யப்படும் எவையேனும் பொருட்கள் மீது வருமதியான வரிக் கொடுப்பனவை, அத்தகைய பொருட்களின் இறக்குமதித் தேதியிலிருந்து நாற்பத்தைந்து நாட்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு அல்லது அமைச்சரால் தீர்மானிக்கப்பட்டு கசெற்றில் வெளியிடப்படக்கூடியவாறான அறிவித்தலில் குறிப்பிடப்படும் தொண்ணூறு நாட்களை விஞ்சாத அத்தகைய வேறு காலப்பகுதிக்கு, அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மீது வருமதியான வரித்தொகையை மேவுகின்ற வங்கி உத்தரவாதமொன்றை அல்லது கூட்டணைப்பு உத்தரவாதமொன்றை கொடுத்துதவுவதற்கமைய பிற்போடலாம்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(1அ) ஒராம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், வழங்கப்பட்ட பண்டங்கள் தொடர்பில் அப்பண்டங்கள் ஒப்படைக்கப்பட்ட தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் பணப்பட்டியலொன்று வழங்கப்படும்போது அத்தகைய பண்டங்கள் வழங்கப்பட்ட நேரமாகக் கருதப்படுதல் வேண்டும்.".

(2) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(2அ) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பில், அத்தகைய சேவை பூரியப்பட்ட தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் பணப்பட்டியலொன்று வழங்கப்படும்போது, அத்தகைய சேவை வழங்கப்பட்ட நேரமானது பணப்பட்டியல் வழங்கப்பட்ட நேரமாகக் கருதப்படுதல் வேண்டும்.".

(3) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "ஓர் உடன்படிக்கையின்கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நியமிக்கப்பட்ட தேதியன்று அல்லது அதன்பின்னர் செய்துகொள்ளப்பட்ட ஓர் உடன்படிக்கையின் கீழ்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்:

(4) அவ்வட்டவணையின் முடிவில் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(4) ஆணையாளர் - தலைமையதிபதி, 23ஆம் பிரிவின் கீழ் கொடுப்பனவு அடிப்படையொன்றில் வரிக்கு கணக்குக் காட்டுமாறு பதிவு செய்யப்பட்ட ஆளெவரையும் பணித்துள்ளவிடத்து, அத்தகைய ஆளினால் வழங்கப்பட்ட பண்டங்களினதும் சேவைகளினதும் வழங்கல் நேரமானது, அத்தகைய வழங்கல் தொடர்பிலான கொடுப்பனவு பெறப்பட்ட நேரமாதல் வேண்டும்.".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "இச் சட்டத்தின்கீழ் இறுக்கப்படற்பாலதான ஏதேனும் வரியையும் அத்துடன் 1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான உற்பத்தித் தீர்வையையும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "இச் சட்டத்தின்கீழ் இறுக்கப்படற்பாலதான ஏதேனும் வரியையும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவி (5)ஆம் உட்பிரிவின் (i) என்னும் பந்தியில், "இல்லாதொழிந்த நேரத்தின் பின்னர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இல்லாதொழிந்த நேரத்தில்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அப்பிரிவில் (10)ஆம் உட்பிரிவில், "செலுத்தப்பட்ட தொகையாக அல்லது மீளளிக்கப்படற்பாலதான ஏதேனும் தொகையாக அல்லாத வைப்பிலிடப்பட்ட தொகையாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான வரியைக் கழித்துச் செலுத்தப்பட்ட தொகையாக அல்லது மீளளிக்கப்படற்பாலதான ஏதேனும் தொகையாக அல்லாத, இச்சட்டத்தின்கீழ் செலுத்தப்படற் பாலதான வரியைக் கழித்து வைப்பிலிடப்பட்ட தொகையாக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(4) அப்பிரிவின் முடிவில் பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(11) வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையொன்றாக அல்லாததும் மீளாய்வு செய்யப்படற்பாலதல்லாததுமானதும், 1996 திசெம்பர் 23ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் செய்துகொள்ளப்பட்டதுமான உடன்படிக்கையொன்றின் கீழ் பண்டங்கள் அல்லது சேவைகள் வழங்கப்படுமிடத்து அத்தகைய வழங்கலின் பெறுமதியானது, அத்தகைய வழங்கலுக்கான பிரதிபயனுக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதாக, ஆணையாளர் - தலைமையதிபதியால் தீர்மானிக்கப்பட்ட வரியைக் கழித்து, அத்தகைய உடன்படிக்கையில் விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய பிரதிபயனாதல் வேண்டும்.

(12) குத்தகை உடன்படிக்கையொன்றின்கீழ் வழங்கப்பட்ட எவையேனும் பண்டங்கள், அதனையடுத்து குத்தகை காலப்பகுதியின் முடிவில் குத்தகை உடன்படிக்கையின் முடிவில் குத்தகை உடன்படிக்கையின் மொத்தப் பிரதிபயனின் பத்து சதவீதத்தை விஞ்சாத பிரதிபயனொன்றுக்குக் குத்தகைப் பெறுநர் ஒருவருக்குக் கைமாற்றப்படுமிடத்து, அத்தகைய பிரதிபயன் குத்தகை உடன்படிக்கையின் பிரதிபயனின் ஒரு பகுதியாகக் கருதப்படுதல் வேண்டும்.".

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "ஏதேனும் தீர்வையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் தீர்வையும் 1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் உற்பத்தித் தீர்வையும்": என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2)ஆம் பிரிவை நீக்குஞ்செய்வதன் மூலமும்.".

(6) முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பந்தியின் (iii)ஆம் உட்பந்தியில், "இதனையொத்த பூலமைச் சொத்து உரிமை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இதனையொத்த பூலமைச் சொத்து உரிமை; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பந்தியின் (iii)ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(iv) (ஒரு கப்பலிலிருந்து இன்னொன்றுக்கு ஏற்றுயனுப்பப்படுதல் உட்பட) பண்டங்களை அல்லது பயணிகளை சர்வதேச ரீதியில் ஏற்றிச் செல்லுதல்.".

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவு அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (அ), (ஆ), (இ) என்னும் பந்திகளைநீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் பந்திகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(அ) விடயத்திற்கேற்ப ஒரு மாதத்தை அல்லது மூன்று மாதங்களைக் கொண்ட ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் முடிவில் விடயத்திற்கேற்ப ஒரு மாதத்தை அல்லது மூன்று மாதங்களைக் கொண்ட அந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியில் இலங்கையில் செய்யப்பட்ட பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல்களின் மொத்தப் பெறுமதி ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சியுள்ளவிடத்து; அல்லது

(1) அப்போது முடிவடையும் பன்னிரண்டு மாத காலப்பகுதியில் இலங்கையில் செய்யப்பட்ட வரிவிதிக்கப்படற்பாலதான அவரது பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் மொத்தப் பெறுமதி, ஒரு மில்லியன் எட்டு இலட்சம் ரூபாவை விஞ்சியிருப்பின்;

(2) ஏதேனும் நேரத்தில் விடயத்திற்கேற்ப அடுத்துறும் வரிவிதிக்கப்படற்பாலதான ஒரு மாதத்தை அல்லது மூன்று மாதங்களைக் கொண்ட காலப்பகுதியில் இலங்கையில் அவரது வரிவிதிக்கப்படற்பாலதான பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வழங்கல்களின் மொத்தப் பெறுமதி, ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சக்கூடிய சாத்தியமுண்டு என அல்லது அடுத்துறும் பன்னிரெண்டு மாத காலப் பகுதியில் ஒரு மில்லியன் எட்டு இலட்சம் ரூபாவை விஞ்சக்கூடிய சாத்தியமுண்டு என நம்புவதற்கு நியாயமான ஏதுக்களிருப்பின்;

ஆயினும், எவ்வாறாயினும் பண்டங்களின் வழங்கல், தனிமையாக்கப்பட்ட கொடுக்கல், வாங்கலொன்றைத் தொடர்புறுத்துகின்றது என ஆணையாளர் - தலைமை அதிபதி அபிப்பிராயப்படுமிடத்து, இப்பிரிவின் நோக்கங்களுக்காக வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல்களின் மொத்தப் பெறுமதியைக் கணிப்பிடுகையில் அத்தகைய வழங்கலின் பெறுமதி புறநீக்கம் செய்யப்படலாம்.".

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவிற்கான காப்புவாசகத்தில், "10ஆம் பிரிவின்கீழ் அல்லது 12ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "10ஆம் பிரிவின்கீழ் அல்லது 12ஆம் பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட அல்லது 75ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்டவராகக் கருதப்பட்ட" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "10ஆம் அல்லது 12ஆம் பிரிவின் கீழ் பதிவுக்கான விண்ணப்பமொன்றைச் செய்யுமிடத்து" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "10ஆம் அல்லது 12ஆம் பிரிவின்கீழ் பதிவுக்கான விண்ணப்பமொன்றைச் செய்யுமிடத்து அல்லது 75ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவராகக் கருதப்படுமிடத்து" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும், இத்தால் திருத்தப்படுகின்றது.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15ஆம் பிரிவு, அப்பிரிவின் (3)தும் உட்பிரிவில் "சான்றிதழைத் துலாம்பரமாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சான்றிதழைத் துலாம்பரமாக" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

11. முதன்மைச் சட்டவாக்கதின் 16ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "பதிவுத் திகதியைப் பின்தொடர்ந்துவரும் அடுத்தடுத்த எட்டு வரிவிதிக்கப்படற்பாலனவான காலப்பகுதிகளுக்கும்" என்னும் சொற்களிலிருந்து, "அத்தகைய வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிகள் கழிந்த பின்னர்" என்பது வரையிலான எல்லாச் சொற்களையும் இலக்கங்களையும் நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"பதிவுத் திகதியைப் பின் தொடர்ந்துவரும் இருபத்துநான்கு மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு, பதிவு செய்யப்பட்ட அத்தகைய ஆள், வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டைக்

கொண்டு நடாத்தாது அல்லது நிறைவேற்றாதொழிந்துள்ளவிடத்து அல்லது அத்தகைய காலப்பகுதிக்குள் வரிவிதிக்கப்படற்பாலதான ஏதேனும் காலப்பகுதியின்போது 10ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள பெறுமதியை விஞ்சாதவிடத்து, அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிகள் கழிந்த பின்னர்";

(2) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில், "பத்தாம் பிரிவின்கீழ் அல்லது 12ஆம் பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட எவரேனும் ஆள்"என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எவரேனும் ஆள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்,"

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "அத்தகைய வழங்கலைப் பெறும் பதிவுசெய்யப்பட்ட இன்னொருவருக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய வழங்கலைப் பெறும் இன்னொருவருக்கு" எனும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(ஆ) வழங்கல் எந்த ஆளுக்குச் செய்யப்படுகின்றதோ அந்த ஆளின் பெயரும் முகவரியும்";

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில், "வழங்கலின் பெறுமதியும் 1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான உற்பத்தித் தீர்வையும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "வழங்கலின் பெறுமதியும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (6)ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக, பின்வருவதனை இடுவதன் மூலமும்;

(6) இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் பதிவு செய்யப்பட்ட ஆளொருவர் இரணடாயிரம் ரூபாவை விஞ்சாத பெறுமதியுடைய வரி விதிக்கப்படற்பாலதான வழங்கலொன்றைச் செய்யுமிடத்து அத்தகைய பதிவு செய்யப்பட்ட ஆள் பின்வருவனவற்றை எடுத்துக்காட்டும் வரிப்பணப் பட்டியலொன்றை வழங்கலாம் -

(அ) வழங்குநரின் பெயர், முகவரி, பதிவிலக்கம்;

(ஆ) வரிப்பணப்பட்டியில் வழங்கப்பட்ட தேதியும் அதன் தொடரிலக்கமும்;

(இ) வழங்கலின் தேதியும் வழங்கப்பட்ட பண்டங்களின் அல்லது சேவைகளின் விவரணமும்;

(ஈ) வழங்கலின் தொகை அல்லது அளவு;

(உ) வழங்கலுக்கான வரி உட்பட்ட பிரதிபயனும் இயைபான வரி வீதமும்.".

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் "பதினைந்து நாட்களுக்குப் பிந்தாமல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மாதத்தின் கடைசித் தினத்திற்குப் பிந்தாமல்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவை நீக்கஞ்செசய்வதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (12)ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக, பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(12) ஆணையாளர் - தலைமையதிபதி (10)ஆம் உட்பிரிவின்கீழ் தண்டமொன்றை விதிக்கின்றவிடத்துத் தவிர, (1)ஆம் உட்பிரிவின் அல்லது (3)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஒவ்வோராளும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்கான குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையில் சுருக்க முறையிலான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.".

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில், "வரியிலிருந்து கழிப்பதற்கு உரித்துடையவராவர்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வரியிலிருந்து கழிப்பதற்கு உரித்துடையவராவார்:

ஆயினும், எவ்வாறாயினும், கொடுப்பனவு அடிப்படையிலான கணக்கீட்டு முறையைக் கையாளும் ஆளெவரும், எந்த வழங்கலுக்கு அத்தகைய ஆளினால் கொடுப்பனவொன்று செய்யப்பட்டுள்ளதோ அந்த வழங்கலொன்று தொடர்பில் மாத்திரம் இச்சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படற்பாலதான அவரது உள்ளீட்டு வரியின் அந்த அளவின்மீது வரவை உரிமைகோருவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.". என்னும் சொற்களை இடுவதன் மூலமும்:

(2) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில், "ஒரு மாதம் முடிவடைவதன்மீது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இரண்டு மாதங்கள் முடிவுறுவதன்மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்:

(3) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவிற்கான காப்புவாசகத்தை நீக்கஞ்செய்து அதற்குப்பதிலாகப் பின்வரும் காப்புவாசகத்தை இடுவதன் மூலமும்:-

"ஆயினும், எவ்வாறாயினும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியொன்றில் -

(அ) சைவர் வீதமிடப்பட்ட வழங்கல்களின் பெறுமதி, வரிவிதிக்கப்படற்பாலதான அந்தக் காலப்பகுதிக்கு வரிவிதிக்கப்படற்பாலதான மொத்த வழங்கல்களின் ஐம்பது சதவீதத்திற்குக் குறைவாகவிராதவிடத்து, சைபர் வீதமிடப்பட்ட வழங்கல்கள், வரிவிதிக்கப்படற்பாலதான மொத்த வழங்கல்களுக்கு என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளனவோ அந்த விகிதாசாரத்துக்குச் சமமானவாறு (வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியொன்றிலிருந்து முன்கொணரப்பட்ட ஏதேனும் மிகை உட்பட) உள்ளீட்டு வரியின் மிகையின் அத்தகைய பாகம்; அல்லது

(ஆ) உள்ளீட்டு வரியின் மிகையொன்றிருக்குமிடத்து, இச்சட்டத்திற்கான அட்டவணையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள இனம் (xxvii) அல்லது (xxviii) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியின்போது இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டுள்ள ஆளொருவரின் விடயத்தில்; அல்லது

(இ) உள்ளீட்டு வரியின் மிகையொன்றிருக்குமிடத்து, (6)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவரின் விடயத்தில், விடயத்திற்கேற்ப மிகையின் அத்தகைய பாகம் அல்லது அத்தகைய மிகை 58ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய எந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின்போது மிகை எழுந்ததோ அந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் முடிவின் பின்னர் அல்லது அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு விவரத்திரட்டு கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து ஒரு மாதத்திற்கும் பிந்தாமல், இதில் எது பிந்தியதோ அப்போது மீளளிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய காலப்பகுதிக்குள் அத்தகைய மீளளிப்பைச் செலுத்தத் தவறும்பட்சத்தில் அத்தகைய மீளளிப்பின்மீது, மீளளிப்பு வருமதியாகும் தேதியிலிருந்து அதன் கொடுப்பனவுத் தேதிவரை 59ஆம் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதப்படி வட்டி செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.":

(4) அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவின் (i)ஆம் பந்தியில் "எவையேனும் பண்டங்களை இடம்பெயர்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எவையேனும் பண்டங்களை இடம்பெயர்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் அல்லது எதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டின் ஏதேனும் வியாபாரக் கையிருப்பின் பாகமாக அமையும் மோட்டார் வாகனம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்:

(5) அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(6) பதிவுசெய்யப்பட்ட எவரேனும் ஆள், தாம் இலங்கையில் ஏதேனும் தொழிலை ஆரம்பித்துள்ளார் என ஆணையாளர் - தலைமையதிபதி திருப்தியுறும் வகையில் எண்பித்திருக்குமிடத்தும் அத்துடன் அத்தகைய தொழில் தொடர்பில் அத்தகைய ஆரம்பத்

தேதியிலிருந்து முப்பது மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல்களைச் செய்வதற்குப் பொறுப்பேற்குமிடத்தும், ஆணையாளர் – தலைமையதிபதி, அவரால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய அத்தகைய தொழில் தொடர்பில் உள்ளீட்டு வரிக்கான வரவினை அனுமதிக்கலாம்.

(7) முப்பத்து மூன்றாம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் வருமதியான தொகையை விஞ்சிய ஏதேனும் மீளளிப்பு அல்லது உரிமை கோரப்பட்ட உள்ளீட்டு வரித்தொகையின் ஏதேனும் மிகை, விடயத்திற்கேற்ப பதிவு செய்யப்பட்ட எந்த ஆளுக்கு மீளளிப்புச் செய்யப்பட்டதோ அந்தப் பதிவுசெய்யப்பட்ட ஆளின்மீது அல்லது உரிமைக் கோரிக்கையைச் செய்யும் பதிவு செய்யப்பட்ட ஆளின்மீது மதிப்பீட்டாளர் ஒருவரால் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய தொகையானது, விடயத்திற்கேற்ப அத்தகைய மீளளிப்பில் அல்லது மிகையிலுள்ள மிகை உரிமைக்கோரிக்கையில் விளைந்த உள்ளீட்டு வரியின் மிகை முதன்முதலாக எழுந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் முதலாம் தினத்தன்று தவணை தவறுகையிலுள்ள வரியாகக் கருதப்படுதலும் வேண்டும்.".

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "இன்னுமோர் பதிவு செய்யப்பட்ட ஆளுக்குச் செய்யப்பட்ட வழங்கலொன்றின்மீது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இன்னுமோர் ஆளுக்குச் செய்யப்பட்ட வழங்கலொன்றின்மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "எவருக்கு வழங்கல் செய்யப்பட்டதோ அவர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எவருக்கு வழங்கல் செய்யப்பட்டதோ அவர் பதிவுசெய்யப்பட்ட ஆளொலுவராக இருப்பின், அவருக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "பதினைந்தாம் நாளுக்குப் பிந்தாமல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கடைசி நாளுக்குப் பிந்தாமல்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவுக்கான இரண்டு காப்புவாசகங்களையும் நீக்கஞ்செய்வதன் மூலமும்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "பதினைந்தாம் நாளுக்கு" என்னும் சொற்கள் எங்கெங்கு காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் அவற்றிற்குப் பதிலாக, "கடைசி நாளுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30ஆம் பிரிவு "வழங்கலொன்ளைச் செய்துள்ளார்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வழங்கலொன்றைச் செய்துள்ளார் என அல்லது வழங்கலானது கூட்டுச்சேர்ந்த ஆட்களிடையிலான கொடுக்கல் வாங்கலைத் தொடர்புறுத்துகின்றது" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33ஆம் பிரிவு, "காலப்பகுதிக்கு விவரத்திரட்டொன்றைக் கொடுத்துதவியுள்ளவிடத்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "காலப்பகுதிக்கு 21ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு விவரத் திரட்டொன்றைக் கொடுத்துதவியுள்ளவிடத்து" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "அத்தகைய தவணை தவறுகைக்கு அத்தகைய அலுவலர் பொறுப்பாளியாக இருப்பினுஞ்சரி, இல்லாவிடினுஞ்சரி" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய அலுவலர், ஆணையாளர் – தலைமையதிபதி திருப்தியுறும் வகையில் மாறாக எண்பித்தாலன்றி அத்தகைய அலுவலர் அத்தகைய தவணை தவறுகைக்குப் பொறுப்பாளியாவார் என்றாற்போன்று" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

(2) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவைப் புகுத்துவதன் மூலம்:

"(2)கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவொன்று உரிய தேதியன்று அல்லது அதற்கு முன்னர் எதேனும் வரியைச் செலுத்தியிராதவிடத்து அவர் ஆணையாளர் - தலைமையதிபதி திருப்தியுறும் வகையில் மாறாக எண்பித்தாலன்றி, எழுத்திதலான வேறு ஏதேனும் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், அத்தகைய கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவின் எவரேனும் பங்காளருக்கு அல்லது பதவிதாங்குநருக்கு எதிராக, அத்தகைய தவணை தவறுகைக்குப் பொறுப்பாளியாவார் என்றாற்போன்று இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகள் எல்லாவற்றின்கீழும் அல்லது எவற்றின்கீழும் நடவடிக்கை எடுத்தல் சட்டமுறையானதாதல் வேண்டும்.".

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 57ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவை (1)ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுதல் மூலமும் ;

(2) மீள் இலக்கமிடப்பட்ட (1)ஆம் உட்பிரிவின் முடிவில் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(2) கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவொன்று கலைக்கப்படுமிடத்தும் அத்துடன் கூட்டிணைக்கப்படாத அத்தகைய குழு எந்த வரிக்கு ஆளாயிருக்கின்றதோ அத்தகைய வரியை அறவிடமுடியாதிருக்குமிடத்தும் அப்போது எந்தக் காலப்பகுதி தொடர்பில் அத்தகைய வரி செலுத்தப்படற்பாலதாயிருக்கின்றதோ அந்த ஏதேனும் காலப்பகுதியில் பங்காளர் ஒருவராக அல்லது பதவிதாங்குநர் ஒருவராக இருந்த ஒவ்வோராளும், அத்தகைய கூட்டிணைக்கப்படாத குழுவின் அலுவல்கள் தொடர்பில் வரிக் கொடுப்பனவின் தவணை தவறுகையானது அவரைப் பொறுத்தளவில் ஏதேனும் மிக்க கவனமின்மைக்கு, பிழையான செய்கைக்கு அல்லது கடமை மீறுதலுக்கு ஏற்றிக்கூறப்பட முடியாதென அவர் எண்பித்தாலன்றி அத்தகைய வரியின் கொடுப்பனவுக்குக் கூட்டாகவும் தனித்தனியாகவும் ஆளாதல் வேண்டும் என்பதுடன் வரி சேகரித்தலும் அறவிடுதலும் பற்றிய இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.".

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 58ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவிற்கான காப்புவாசகத்தில் அக்காப்புவாசகத்தின் (i) ஆம், (ii) ஆம் பந்திகளை நீக்கஞ்செய்து அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:

(i) சைவர் வீதமிடப்பட்ட வழங்கல்களைச் செய்யும் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவர்; அல்லது

(ii) 22ஆம் பிரிவின் (4)ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் ஆளெவரும்;

(iii) 22ஆம் பிரிவின் (6)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் பதிவு செய்யப்பட்ட ஆளெவரும்";

(2) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில் -

(அ) அதன் (அ) என்னும் பந்தியில், "வரி விதிக்கற்பாலதான ஏதேனும் காலப்பகுதி அல்லது வரிவிதிக்கற்பாலதான காலப்பகுதியொன்றில் மாதமொன்று" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வரிவிதிக்கற்பாலதான ஏதேனும் காலப்பகுதி" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அதன் (ஆ) என்னும் பந்தியில் "வரிவிதிக்கற்பாலதான ஏதேனும் காலப்பகுதி அல்லது வரிவிதிக்கற்பாலதான காலப்பகுதியொன்றில் மாதமொன்று தொடர்பில் வரிவிதிக்கற்பாலதான ஏதேனும் காலப்பகுதிக்குரிய ஒரு விவரத்திரட்டைக் கொடுத்துதவத் தவறியுள்ளவிடத்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வரிவிதிக்கற்பாலதான காலப்பகுதி தொடர்பில் வரிவிதிக்கற்பாலதான ஏதேனும் காலப்பகுதிக்குரிய ஒரு விவரத்திரட்டைக் கொடுத்துதவத் தவறியுள்ளவிடத்து" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 59ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பந்தியில், "செலுத்தப்படல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "செலுத்தப்படல் வேண்டும்:

ஆயினும் எவ்வாறாயினும், பதிவுசெய்யப்பட்ட ஆளின் எவையேனும் பதிவேடுகள் தொடர்பில் வரிமதிப்பீட்டாளரால் விடுக்கப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகுவதில் பதிவுசெய்யப்பட்ட ஆளினால் நாமதமிருக்குமிடத்து அத்தகைய வட்டி செலுத்தப்படற்பாலதாதல் ஆகாது.".

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் XI இத்தால் நீக்கஞ்செய்யப்படுகின்றது.

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 68ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 71ஆம் பிரிவு, அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில், "பிரதி ஆணையாளர் ஒருவர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உண்ணாட்டரசிறை பிரதி ஆணையாளர் அல்லது உண்ணாட்டரசிறை சிரேட்ட வரிமதிப்பீட்டாளர் ஒருவர்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

27. பின்வரும் புதிய பிரிவுகள் 71ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை முறையே முதன்மைச் சட்டவாக்கத்தின் 71அ அத்ததுடன் 71ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்.

71அ. (1) பண்டங்கள், சேவைகள் வரி மீளளிப்பு நிதியம் என அழைக்கப்படும் நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்).

"பண்டங்கள் சேவைகள் வரி மீளளிப்பு நிதியம்."

(2) நிதியத்தில் பின்வருவன வரவுவைக்கப்படுதல் வேண்டும்:

(அ) ஒரு நூறு மில்லியன் ரூபா பணத் தொகையொன்று, இது திரட்டு நிதியத்திலிருந்து நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்:

(ஆ) நியமித்த தேதியிலிருந்து தொடங்கும் ஒவ்வொரு மாதமும் சேகரிக்கப்பட்ட பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரியின் இருபத்தைந்து சதவீதம் அம்மாதத்தை உடனடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க செலுத்தப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட எல்லா மீளளிப்புக்களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டும்.

(4) (i) ஆணையாளர் – தலைமையதிபதி அல்லது அதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் வேறு எவரேனும் அலுவலர் நிதியதத்தை நிர்வகித்தல் வேண்டும்.

(ii) மீளளிப்புச் செய்யப்படக்கூடிய முறை மற்றும் விதம் தொடர்பாக ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.

71ஆ. ஆளொருவரால் செலுத்தப்படற்பாலதான வரிமதிப்பீட்டிற்கும் அத்துடன் அத்தகைய ஆளிடமிருந்து வரியைச் சேகரிப்பதற்கும் வழிகோலும் தகவலைவழங்குகின்ற வேறு எவரேனும் ஆளுக்கு, ஆணையாளர் – தலைமை அதிபதி, சம்பந்தப்பட்ட விடயத்தின் சூழ்நிலைகளில் நியாயமானதென அவர் கருதுகின்றவாறான அத்தகைய பணத்தொகைகளை அத்தகைய நோக்கத்திற் கெனப் பாராளுமன்றத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத் தொகைகளிலிருந்து செலுத்தலாம்"

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:–

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சுகின்றதோ" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சுகின்றதோ" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்:

(2) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில், "(1)ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு" என்னும் சொற்களுக்குப் பதிரலாக, "நியமித்த தேதிக்குப் பின்னர் வரிவிதிக்கற்பாலதான ஏதேனும் காலப்பகுதிக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்:

(3) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:–

"(4) பதிவுசெய்யப்பட்ட ஆளெவரும் நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் அத்தகைய ஆளினால் இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்கள் தொடர்பில் 1981அம் ஆண்டின் 69ஆம் இலக்க மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் 12ஆம் பிரிவின்கீழ் மொத்த விற்பனை வரவு வரியைச் செலுத்தியுள்ளாரெனவும் அத்துடன் 3ஆம் பிரிவிற்குட்படாத வரிவிதிக்கற்பாலதான வழங்கல்களைச் செய்யும் நெறி முறையின்போது அத்தகைய பண்டங்கள் நியமித்த தேதியன்று அல்லது அதன்பின்னர் அத்தகைய ஆளினால் வழங்கப்பட்டன எனவும் ஆணையாளர் - தலைமையதிபதி திருப்தியுறும் வகையில் எண்பிக்கப்படுமிடத்து செலுத்தப்பட்ட அல்லது அத்தகைய வரிவிதிக்கற்பாலதான வழங்கலுக்கு எற்றிக்கூறப்படற்பாலதான அதன் பாகம், 1981ஆம் ஆண்டின் 69ஆம் இலக்க மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் பிரிவுகள் 47, 48, 48அ, 48ஆ என்னும் பிரிவுகளின்கீழ் வரவு கணிக்கப்படாவிடில் அல்லது மீளளிக்கப்படாவிடில் அல்லது சொல்லப்பட்ட சட்டத்தின் 49ஆம் பிரிவின்கீழ் மீளளிக்கப்படாவிடில் 22ஆம் பிரிவின் நோக்கங்களுக்கு உள்ளீட்டு வரிக்கடனாகக் கருதப்படுதல் வேண்டும்".

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:

(1) "வரிமதிப்பீட்டாளர்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"கூட்டுச்சேர்ந்த ஆட்கள்" என்பது -

(அ) ஒரே பங்காளர்களைக் கொண்டுள்ள அல்லது ஒரே பங்காளர்களால் முகாமை செய்யப்படுவதும் கட்டுப்படுத்தப்படுவதுமான எவையேனும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கம்பனிகள் என்று; அல்லது

(ஆ) ஏதேனும் கம்பனியும் அத்துடன் ஏவரேனும் பங்குதாரர் அல்லது அத்தகைய பங்குதாரரின் வாழ்க்கைத்துணை அல்லது பிள்ளை அல்லது அத்தகைய பங்குதாரரின் வாழ்க்கைத் துணையின் அல்லது பிள்ளையின் எவரேனும் நம்பிக்கைப் பொறுப்பாளர், அக்கம்பனியின் செலுத்தப்பட்ட மூலதனத்தின் இருபத்தைந்து சதவீதத்தை அல்லது அதற்குக்கூடுதலானதை அல்லது பிரித்தெடுக்கப்பட்ட பங்குகளின் இருபத்தைந்து வீதத்தை அல்லது அதற்குக் கூடுதலானதை கூட்டாகவோ அல்லது தனித்தனியாகவோ வைத்திருக்கின்றவிடத்து, எவரேனும் அத்தகைய பங்குதாரரும் என்று; அல்லது

(இ) எந்த இரண்டு தனியாட்களுள் ஒருவர் மற்றவரின் வாழ்க்கைத்துணையாக அல்லது பிள்ளையாக அல்லது அத்தகைய வாழ்க்கைத்துணைக்கான அல்லது பிள்ளைக்கான நம்பிக்கைப் பொறுப்பாளராக இருக்கின்றாரோ அந்த எவரேனும் இரண்டு தனியாட்கள் என்று; அல்லது

(ஈ) பங்காண்மையொன்றும் அத்துடன் தனியாளொருவர் அத்தகைய பங்காண்மையின் எவரேனும் பங்காளரின் உறவினராக இருக்குமிடத்து அத்தகைய தனியாள் ஒருவரும் என்று; அல்லது

(உ) கூட்டுத்தொழில் முயற்சியொன்றும் அத்துடன் அத்தகைய கூட்டுத்தொழில் முயற்சியின் உறுப்பினர் ஒருவரின் உறவினரான எவரேனும் ஆளும் என்று; அல்லது

(ஊ) எந்த இரண்டு ஆட்களுள் ஒருவர் மற்றவரின் நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவராக இருக்கின்றாரோ அந்த இரண்டு ஆட்கள் என்று; அல்லது

(எ) ஒருவரொருவருக்கு உறவினரான எவரேனும் இரண்டு தனியாட்கள் என்று பொருள்படும்.".

(2) முறையே "திறந்த சந்தைப் பெறுமதி" அத்துடன் "வரிவிதிக்கற்பாலதான காலப்பகுதி" என்பவற்றிற்கான வரைவிலக்கணங்களை நீக்கஞ் செய்து அவற்றிற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணங்களை இடுவதன் மூலமும்:-

"திறந்த சந்தைப் பெறுமதி" என்பது ஏதேனும் தேதியில் பண்டங்களின் அல்லது சேவைகளின் வழங்கலொன்றின் கூட்டுச்சேர்ந்த ஆட்களாகவிராத ஆட்களுக்கிடையே கட்டுப்பாடின்றி முனையப்பட்டுச் செய்யப்பட்ட வழங்கலொன்றாக இருப்பதும், இலங்கையில் அத்தேதியில் அதே சந்தர்ப்ப சூழ்நிலைகளில் வழங்கப்பட்டிருந்தால் அதையொத்த வழங்கல் பொதுவாக பெற்றிருக்கக்கூடிய பெறுமதி தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் அறவிடப்பட்ட ஏதேனும் வரியைக் கழித்து, 1991ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க

தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின்கீழ் செலுத்தற்பாலதான தேசிய பாதுகாப்பு அறவீடு டீறநீங்கலான, பிரதிபயன் என்று பொருள்படும்;

"வரிவிதிக்கற்பாலதான காலப்பகுதி" என்பது –

(அ) (i) எவரேனும் ஆளின் வரிவிதிக்கற்பாலதான வழங்கல்களின் பெறுமதி முந்திய பன்னிரண்டு மாதங்களின்போது முப்பது மில்லியன் ரூபாவை விஞ்சியுள்ளவிடத்து; அல்லது

(ii) எவரேனும் ஆளின் வரிவிதிக்கற்பாலதான வழங்கல்களின் பெறுமதி அடுத்துறும் பன்னிரண்டு மாதங்களைக்கொண்ட காலப்பகுதிக்கு முப்பது மில்லியனை விஞ்சுவதாக மதிப்பிடப்பட்டுள்ள விடத்து; அல்லது

(iii) எவரேனும் ஆளின் கூட்டுமொத்த விற்பனை வரவு, 1981ஆம் ஆண்டின் 69ஆம் இலக்க மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின்கீழ் நியமித்த தேதிக்கு உடன் முன்னரான ஆறுமாதங்களில் முடிவடையும் அடுத்தடுத்துவரும் நான்கு காலாண்டுகளின்போது முப்பது மில்லியன் ரூபாவை விஞ்சியுள்ளவிடத்து;

(iv) ஆளெவரும் சைவர் வீதமிடப்பட்ட வழங்கல்களைச் செய்யுமிடத்து;

(v) ஆளெவரும் அட்டவணையின் இனம் (xxvii) அல்லது (xviii) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட இல்ங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்துள்ளவிடத்து;

(vi) ஆளெவரும் தொழில் ஒன்றைத் தொடங்கியிருப்பதுடன் 22ஆம் பிரிவின் (6)ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதாகப் பொறுப்பேற்குமிடத்து

ஒருமாத காலப்பகுதியொன்று என்று;

(அ) பந்தி (அ) என்பதில் குறிப்பீடு செய்யப்படாத ஆளொருவர் அல்லது சைவர் வீதமிடப்பட்ட வழங்கல்களைச் செய்கின்றவரும் ஆணையாளர் – தலைமையதிபதியின் அங்கீகாரத்தின்மீது காலாண்டு விவரத்திரட்டைச் சமர்ப்பிக்க விருப்பம் கொண்டுள்ளவருமான ஆளொருவர் தொடர்பில் முறையே சனவரி முதலாம் நாளன்றும், ஏப்பிறல் முதலாம் நாளன்றும், யூலை முதலாம் நாளன்றும், ஒற்றோபர் முதலாம் நாளன்றும் தொடங்கும் மூன்று மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதி என்று

பொருள்படும்;".

30. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:–

(1) அட்டவணையின் (i)ஆம் இனத்தில் "தேங்காய்கள்" என்னும் சொல்லிலிருந்து அவ்வட்டபிரிவின் இறுதிவரையிலான எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாக, "தேங்காய்கள், தேங்காய்த் துருவல்கள், தேங்காய்ப பிண்ணாக்கு, பதப்படுத்தப்படாத வன உற்பத்திப் பொருட்கள், தேயிலை, தேயிலைப்பச்சிலை, நெல், ஏலக்காய், கறுவா, கராம்பு, சாதிக்காய், மிளகு அல்லது ஏதேனும் கமத்தொழில் தோட்டப்பயிர்ச்செய்கை, விலங்கு வேளாண்மை, பறவை அல்லது மீன்பிடிப் பொறுப்புமுயற்சி என்பவற்றின் வேறு ஏதேனும் பதப்படுத்தப்படாத விளைபொருளின் வழங்கல் அல்லது இறக்குமதி." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது;

(2) அவ்வட்டவணையின் (ii)ஆம் இனத்தில் "என்பவற்றின் இறக்குமதியும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "என்பவற்றின் வழங்கல் அல்லது இறக்குமதி" என்னும் சொற்களை இடுவதன் மூலம்;

(3) அட்டவணையின் (iv)ஆம் இனத்தை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் இனத்தை இடுவதன் மூலம்:–

"(iv) ஏதேனும் விவரணத்திலான பாண் வழங்கல் அல்லது இறக்குமதி";

(4) அவ்வட்டவணையின் (vi)ஆம் இனத்தில் "வழங்கல்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "வழங்கல் அல்லது இறக்குமதிசெய்தல்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்;

(5) அவ்வட்டவணையின் (xii)ஆம் இனத்தில், "திரவப் பெற்றோலிய வாயு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "திரவப் பெற்றோலிய வாயு அத்துடன் பெற்றோல்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(6) அவ்வட்டவணையின் (xv)ஆம் இனத்தில் "இறக்குமதி:" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "வழங்கல் அல்லது இறக்குமதி:" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(7) அவ்வட்டவணையின் (xix)ஆம் இனத்தில் "இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் அல்லது மாகாண சபையொன்றின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(8) அவ்வட்டவணையின் (xxii)ஆம் இனத்தில் "இறக்குமதி செய்தல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக,"வழங்கல் அல்லது இறக்குமதி செய்தல்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்;

(9) அவ்வட்டவணையின் (xxv)ஆம் இனத்தை நீக்கஞ் செய்வதன்மூலம்;

(10) அவ்வட்டவணையின் (xxvi)ஆம் இனத்தில் "75 கிலோவரை" என்னும் சொற்களுக்கும இலக்கங்களுக்கும் பதிலாக, "90 கிலோ ஹோர்ட்ஸ் வரை" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம்;

(11) அவ்வட்டவணையின் (xxix)ஆம் இனத்தை நீக்கஞ் செய்வதன்மூலம்;

(12) அவ்வட்டவணையின் (xxx)ஆம் இனத்தை நீக்கஞ் செய்து அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் இனத்தை இடுவதன்மூலம்:-

(xxx) இலங்கையிலுள்ள எந்தக் கம்பனியுடனும் 1978ஆம்ஆண்டின் 4ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் நியமித்த தேதியன்று அல்லது அதற்கு முன்னர் உடன்படிக்கையொன்று செய்துகொள்ளப்பட்டதோ அந்தக் கம்பனியொன்றுக்கு அத்தகைய உடன்படிக்கை தொடர்புறுத்தும் கருத் திட்டத்தின் மொத்தச் செலவு 50 அமெரிக்க டொலருக்கு அல்லது அதற்குச் சமமான தொகைக்குக் குறைவாயில்லாமல் இருப்பின் 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் வதிவற்ற ஆளொருவரால் கட்டிடக்கலை, பொறியியல் தொகை அளவீட்டு அல்லது நிர்மாண முகாமைத்துவ சேவைகளை இலங்கையில் வழங்குதல்;

(13) அவ்வட்டவணையின் முடிவில் பின்வரும் இனங்களைச் சேர்ப்பதன்மூலம்:

(xxxii) வதிவிட இடவசதியின் வழங்கல் குத்தகை அல்லது வாடகை;

(xxxiii) மரக்கட்டை வாங்கல் அல்லது இறக்குமதி;

(xxxiv) மருத்துவ நிறுவனங்களால் வழங்கப்படும் எல்லா சுகாதாரப் பராமரிப்புச் சேவைகளினதும் அல்லது அத்தகைய பராமரிப்பை வழங்கும் தொழிலியல் ரீதியல் தகைமைபெற்ற ஆட்களினால் வழங்கப்படும் அத்தகைய சேவைகளின் வழங்கல்;

(xxxv) நியமித்த தேதியிலிருந்து தொடங்கும் இரண்டாண்டுக் காலப்பகுதியின்போது உல்லாசப் பயணிகளுக்கு ஒட்டல் தங்கும் இடவசதி வழங்கல்;

(xxxvi) நியமிக்கப்பட்ட திகதியிற் தொடங்கி இரண்டு ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதியின்போது 1966ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உல்லாசப் பயணச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட உல்லாசப் பயணச் சபையுடன் பதிவுசெய்யப்பட்டவர்களான பிரயாண முகவர்களால் உல்லாசப் பயணிகளுக்கு உள்வருகைச்சேவைகளின் வழங்கல்,

(xxxvii) பவளங்கள், மாணிக்கக்கற்கள், இயற்கை அல்லது செயற்கை மணிக்கற்கள் அல்லது பகுதி மணிக்கற்கள் மாணிக்கத்தூள், வேறு தூள், விலைமதிப்புள்ள உலோகங்கள், விலைமதிப்புள்ள உலோகங்கள் பதித்த உலோகங்கள் அத்துடன் தங்க நாணயங்கள் என்பனவற்றின் வழங்கலும் இறக்குமதியும்;

(xxxviii) சுகாதார சேவைகளை வழங்குவதற்கான அம்பியுலன்ஸ் வண்டிகள், மருத்துவ, பல்மருத்துவ உபகரணம் என்பன உட்பட பொறி, மருத்துவ, சத்திரசிகிச்சைச் சாதனங்கள், கருவிகள், துணையுறுப்புகள் வழங்கலும், இறக்குமதி செய்தலும்.

31. இச் சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

1998ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டு (திருத்தச்) சட்டம்

[1998ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

1991ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச் சட்டமானது 1998ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு அறவீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன் 1998, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. 1991ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின் 2ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "காப்புறுதி அல்லது வங்கித்தொழில் அல்லது நிதித்தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற" என்னும் சொற்களுக்குப் பதிலாக "காப்புறுதி அல்லது வங்கித்தொழில் அல்லது நிதித் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற; அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் இறுதியில் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(ஈ) தொலைத் தொடர்புச் சேவைகளை வழங்குகின்ற தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற,".

(3) இச் சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

1998ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்

[1998ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 1998ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க நிதி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) 1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் 11ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"கணக்குகளின் கணக்காய்வு.

11. பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பாக அரசியலமைப்பின் 154ஆம் உறுப்புரை, சபை நிதியத்தின் கணக்குகளினது கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

"தேசிய லொத்தர்கள்.

14. (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காகச் சபை லொத்தர்களை நடாத்தலாம்.

(2) சபையின் சார்பில், இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக வேறெதேனும் ஆளினால் லொத்தர்கள் நடாத்தப்படுவதற்காக, அத்தகைய வேறு ஆளுடன் சபையானது, உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளலாம்.

(3) சபையானது, அதற்கென வழங்கப்பட்ட உரிமத்தின் மூலம், இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக வேறெவரேனுமாளினால் லொத்தர்கள் நடாத்தப்படுவதற்கு அதிகாரமளிக்கலாம்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் சபையினால் நடாத்தப்பட்ட அல்லது (2)ஆம் உட்பிரிவின்கீழ் செய்துகொள்ளப்பட்ட ஓர் உடன்படிக்கையின்கீழ் சபையினால் நடாத்தப்பட்ட அல்லது (3)ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஓர் உரிமத்தின் அதிகாரத்தின் கீழ் நடாத்தப்பட்ட ஒவ்வொரு லொத்தரும் இச்சட்டத்தின் இப்பாகத்தில் "தேசிய லொத்தர்" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது.".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 14அ என்ற பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும்:-

"14ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமத்தின் நியதி, நிபந்தனைகள் முதலியன.

14அ. (1) பதினான்காம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின்கீழ் சபையினால் வழங்கப்பட்ட ஒவ்வோர் உரிமமும், சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறானவையும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறானவையுமான அத்தகைய நியதி, நிபந்தனைகளுக்கு அமைந்ததாதல் வேண்டும்.

(2) பதினான்காம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஒவ்வோர் உரிமம் தொடர்பிலும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையினதான கட்டணமொன்று செலுத்தப்படுதல் வேண்டும். உரிமமானது, எவ்வாளுக்கு வழங்கப்படுகிறதோ அவ்வாளினால் கட்டணமானது சபைக்குச் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், சபையினால் திரட்டு நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(3) உரிமமானது, எந்த நியதிக்கு அல்லது நிபந்தனைக்குஅமைந்ததாகவுள்ளதோ அந்த நியதிக்கு அல்லது நிபந்தனைக்கு அல்லது இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு உரிமம் வைத்திருப்பவர் இணங்கியொழுகத் தவறின், சபையானது 14ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் கீழ் அதனால் வழங்கப்பட்ட ஓர் உரிமத்தை இல்லாதாக்குவது அதற்குச் சட்டமுறையானதாததல் வேண்டும்.

(5) முதன்மைச் சட்டவாக்கத்தின் 15ஆம் பிரிவு, "சம்பந்தமாக நடாத்தப்பட்ட" என்ற சொற்களுக்குப் பதிலாக, "சம்பந்தமாக நடாத்தப்பட்ட அல்லது சம்பந்தமாக நடாத்தப்பட அதிகாரமளிக்கப்பட்ட" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

(6) முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1(ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(1) தேசிய லொத்தரொன்றில் அளிக்கப்பட வேண்டிய பரிசுகளின் எண்ணிக்கையும் அத்தகைய ஒவ்வொரு பரிசினது பெறுமதியும் -

(அ) சபையினால் நடாத்தப்பட்ட ஒரு லொத்தரின் விடயத்தில் விதித்துரைக்கப்பட்டவாறிருத்தல் வேண்டும்;

(ஆ) 14ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் கீழ் செய்துகொள்ளப்பட்ட ஓர் உடன்படிக்கையின்கீழ் சபையினால் நடாத்தப்பட்ட லொத்தரொன்றின் விடயத்தில், அத்தகைய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்டவாறிருத்தல் வேண்டும்;

(இ) 14ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின்கீழ் நடாத்தப்பட்ட லொத்தரொன்றின் விடயத்தில், அத்தகைய உரிமத்தின் நியதி, நிபந்தனைகளில் குறித்துரைக்கப்பட்டவாறிருத்தல் வேண்டும்.".

(2) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(3) ஒவ்வொரு தேசிய லொத்தரிலும் பரிசு பெற்றோர்:-

(அ) சபையினால் நடாத்தப்பட்ட லொத்தரொன்றின் விடயத்தில், விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய முறையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) 14ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின்கீழ் செய்துகொள்ளப்பட்ட ஓர் உடன்படிக்கையின்கீழ் சபையின் சார்பில் நடாத்தப்பட்ட லொத்தரொன்றின் விடயத்தில், அத்தகைய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) 14ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஓர் உரிமத்தின் அதிகாரத்தின்கீழ் நடாத்தப்பட்ட லொத்தரொன்றின் விடயத்தில், அத்தகைய உரிமத்தின் நியதி, நிபந்தனைகளில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும.".

(3) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில் -

"(அ) "ஏதேனும் தேசிய லொத்தரிலான பரிசுகளுக்கான சீட்டிழுப்புத் திகதியிலிருந்து" என்ற சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் தேசிய லொத்தரிலான பரிசு பெற்றோரைத் தீர்மானிக்கும் திகதியிலிருந்து" என்ற சொற்களை இடுவதன்மூலமும் :

(ஆ) "சபையானது, அத்தகைய பரிசை அளித்தல் வேண்டும்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "விடயத்திற்கேற்ப, சபையானது அல்லது சபையின் சார்பில் அத்தகைய தேசிய லொத்தரை நடாத்துகின்ற ஆள் அல்லது 14ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஓர் உரிமத்தின் அதிகாரத்தின்கீழ் அத்தகைய தேசிய லொத்தரை நடாத்துகின்ற ஆள் அத்தகைய பரிசை அளித்தல் வேண்டும்" என்ற சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்."

(7) முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "ஒவ்வொரு தேசிய லொத்தரும்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "சபையினால் நடாத்தப்பட்ட ஒவ்வொரு தேசிய லொத்தரும்" என்ற சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(1அ) சபையினால் நடாத்தப்பட்ட தேசிய லொத்தரொன்றில் பணமாகவுள்ள பரிசு எவரேனுமாளினால் வெல்லப்படாதவிடத்து, அத்தகைய பரிசுப் பணம், இப்பிரிவில் முரணாக எது எவ்விதமிருப்பினும், பரிசு ஒதுக்குக் கணக்கொன்றுக்கு வரவுவைக்கப்பட வேண்டுமென்பதுடன், அத்தகைய கணக்கில் திரளும் பணங்கள், சபையினால் நடாத்தப்படும் அடுத்துப் பின்னரான தேசிய லொத்தர்களிலான பரிசுகளை அளிப்பதற்குப் பயன்படுத்தப்படுதலும் வேண்டும்.".

(3) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில், "நிரந்தரச் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட" என்ற சொற்களுக்குப் பதிலாக "அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட" என்ற சொற்களை இடுவதன் மூலமும்:

(4) அப்பிரிவின் முடிவில் பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(3) பதினான்காம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின்கீழ் செய்துகொள்ளப்பட்ட ஓர் உடன்படிக்கையின்கீழ் சபையின் சார்பில் நடாத்தப்பட்ட ஒவ்வொரு தேசிய லொத்தரினதும் வரும்படிகளை, அவ்வுடன்படிக்கையின் நியதிகளின்கீழ் அத்தகைய வரும்படிகளிலிருந்து அத்தகைய தேசிய லொத்தரில் அளிக்கப்பட்ட பரிசுகளின் பெறுமதியை அல்லது அத்தகைய தேசிய லொத்தரை நடாத்துகின்ற ஆளுக்குச் செலுத்தப்படற்பாலனவான எவையேனும் முகாமைக் கட்டணங்களை அத்துடன் (2)ஆம் உட்பிரிவின் (ஆ), (இ), (ஈ) மற்றும் (உ) என்னும் பந்திகளிற் குறிப்பீடு செய்யப்பட்ட எவையேனும் கொடுப்பனவுகளையும் சமாளிக்கும் நோக்கங்களுக்கு அவசியமாகவுள்ள ஒரு தொகையெனச் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொகையைக் கழித்த பின்னர், சபையானது, அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரினூடாகத் திரட்டுநிதியத்துக்குச் செலுத்துதல் வேண்டும்.

(4) பதினாறாம் பிரிவின்கீழ் சபையின் நிதியத்துக்கு இழப்பிக்கப்பட்டுச் செலுத்தப்பட்ட தேசிய லொத்தரிலான எல்லாப் பரிசுகளும், சபையினால் திரட்டு நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்."

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(1) "நிதியாண்டு" என்பதன் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :-

"நிதியாண்டு" என்பது, ஏதேனுமாண்டில் சனவரி 1ஆம் திகதியன்று தொடங்கி அவ்வாண்டின் திசெம்பர் 31ஆம் திகதியன்று முடிவடைகின்ற காலப்பகுதி என்று பொருளாகும்; அத்துடன்

(1) "அமைச்சர்" என்பதன் வரைவிலக்கணத்தை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:

"அமைச்சர்" என்பது, நிதி என்ற விடயம் எவ்வமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சர் என்று பொருளாகும்.

10. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

1998ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க மொத்த விற்பனை வரவு வரி (திருத்தச்) சட்டம்

[1998ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 31ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

1981ஆம் ஆண்டின் 69ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம், 1998ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1981ஆம் ஆண்டின் 69ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் 2ஆம் பிரிவானது, அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) அப்பந்தியின் (iii)ஆம் உட்பந்தியை நீக்குவதன் முலமும்; அத்துடன்

(ஆ) அப்பந்தியின் (iv)ஆம் உட்பந்தியை அப்பந்தியின் (iii)ஆம் உட்பந்தியாக மீள இலக்கமிடுவதன் முலமும்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் (1)ஆம் உட்பந்தியில் உள்ள "இருபத்தைந்து சதவீதத்தால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பத்து சதவீதத்தால்" என்னும் சொற்களை இடுவதன் முலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் முடிவில், பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் முலமும்:-

"(6) சினிமாத் திரைப்படங்களைக் காண்பிக்கின்ற ஏதேனும் தொழிலினது ஏதேனும் காலாண்டுக்கான மொத்த விற்பனை வரவை உறுதிப்படுத்துவதில், 1996, ஒக்றோபர் 24ஆம் தேதிய 946/ 9ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட 1971ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க, இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 5ஆம், 61ஆம் பிரிவுகளின் கீழ ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் 2ஆம் ஒழுங்குவிதியின் கருத்தெல்லைக்குள்ளானதும் அத்தொழில் தொடர்பில் அக்காலாண்டில் சேகரிக்கப்பட்டதுமான ஏதேனும் "அதிகரிப்புக்குச் சமனான தொகையானது கழிக்கப்படுதல் வேண்டும்"

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் "ஏதேனும் பொருளை இறக்குமதி செய்கின்ற ஒவ்வோர் ஆளிடமிருந்தும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "1996ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரிச் சட்டமானது, நடைமுறைக்கு வருகின்றதான தேதிக்கு முன்னர் ஏதேனும் பொருளை இறக்குமதி செய்கின்ற ஒவ்வோர் ஆளிடமிருந்தும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 47ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவினை, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் முலமும்;

(2) மீள இலக்கமிடப்பட்ட (1)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் முலமும்:-

"(2) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், இறுதிக் காலாண்டுக்கு முந்திய காலாண்டுகள் ஒவ்வொன்றுக்காகவும் (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கழிக்கப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியின் ஏதேனும் மீதியானது, மிஞ்சியிருக்கின்றவிடத்து, அத்தகைய மீதித்தொகையானது இறுதிக் காலாண்டுக்கென (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவு தொடர்பில் எவரேனும் ஆளினால் கொடுபடற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து, அது அவ்வாறு கழிக்கப்படக்கூடிய அளவுக்கு கழிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு கழித்த பின்னர் மிஞ்சியிருக்கும் ஏதேனும் மீதித் தொகையானது, 49ஆம் பிரிவின்

ஏற்பாடுகளுக்கமைவாக, 1996ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரிச் சட்டம நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து கணக்கிடப்படும் ஆறு மாதங்கள் முடிவடைந்ததன் பின்னர் மீளளிப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

இந்த உட்பிரிவின் நோக்கங்களுக்காக "கடைசிக் காலாண்டு" என்பது 1996ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரிச் சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று முடிவடைகின்ற காலாண்டு என்று பொருளாகும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள், 2ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள எதேனும் தொழிலுக்கு ஏற்புடையதாதலாகாது."

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவினை, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(2) மீள இலக்கமிடப்பட்ட உட்பிரிவு (1)ஐ உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(2) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், இறுதிக் காலாண்டுக்கு முந்திய காலாண்டுகள் ஒவ்வொன்றுக்காகவும் (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கழிக்கப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியின் ஏதேனும் மீதியானது, எஞ்சியிருக்கின்றவிடத்து, அத்தகைய மீதித் தொகையானது இறுதிக் காலாண்டுக்கென (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவு தொடர்பில் எவரேனும் ஆளினால் கொடுபடற்பாலதான மொதத விற்பனை வரவு வரியிலிருந்து, அது அவ்வாறு கழிக்கப்படக்கூடிய அளவுக்குக் கழிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு கழித்ததன் பின்னர் மிஞ்சியிருக்கும் ஏதேனும் மீதித் தொகையானது, 49ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, 1996ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரிச் சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து கணக்கிடப்படும் ஆறு மாதங்கள் முடிவடைந்த பின்னர் மீளளிப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

இந்த உட்பிரிவின் நோக்கங்களுக்காக "கடைசிக் காலாண்டு" என்பது 1996ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரிச் சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று முடிவடைகின்ற காலாண்டு என்று பொருளாகும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள், 2ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள எதேனும் தொழிலுக்கு ஏற்புடையதாதலாகாது.".

7. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்தாம் ஆண்டு மே மாதம் 1ஆம் திகதிய 869/2ஆம் இலக்க, அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்டதும், முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையின் 1ஆம் பாகத்தின் 3ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பதிவில் உள்ள விவரணத்துக்குள் வருவதும் அக்கட்டளையின் அப்பாகத்தின் 2ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள 84ஆம் இலக்கத் தலைப்பின் கீழான 8424.81ஆம் இலக்க இசைவாக்கப்பட்ட முறைமைக் கோவை தொடர்பிலான பதிவுக்கு நேரொத்ததுமான எதேனும் பொருளை உற்பத்திசெய்கின்ற ஒருவராக அல்லது இறக்குமதி செய்கின்ற ஒருவராகத் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற எவரேனும் ஆளின் மொத்த விற்பனை வரவு தொடர்பில் செலுத்தப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரி வீதமானது, 1993, சனவரி 29ஆம் தேதிய 751/20ஆம் இலக்க, அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்டதும், அச் சட்டத்தின் அப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளையில் முரணாக உள்ளது, எது எப்படியிருப்பினும் -

(i) 1993, சனவரி 29ஆம் தேதியன்று தொடங்கி 1995, பெப்புருவரி 7ஆம் தேதியன்று முடிவுறும் காலப்பகுதிக்கு ஐந்து சதவீதமாக இருத்தல் வேண்டும்; அத்துடன்

(ii) 1995, பெப்புருவரி 8ஆம் தேதியன்று தொடங்கி 1995, ஏப்பிறல் 30ஆம் திகதியன்று முடிவுறும் காலப்பகுதிக்கு ஆறு சதவீதமாக இருத்தல் வேண்டும்.

8. (i) காரிக்கன் துணியை உருவாக்கி முடிக்கப்பட்ட துணியாக மாற்றுகின்ற; அல்லது

(ii) இரசாயன முறையாகக் கழுவுதல் அல்லது சாயமூட்டுதல் அல்லது பூத்தையல் வேலை, அலங்கார வேலை அல்லது தொடர் அச்சுமுறை மூலம் ஆடைகளின் தரத்தையும் தன்மையையும் சீர்திருத்துகின்ற,

சேவைகளை, ஆடைகளை ஏற்றுமதி செய்வதில் ஈடுபட்டுள்ள ஏதேனும் தொழிலுக்கு வழங்குகின்ற ஒவ்வொரு தொழிலும், முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றில் முரணாக உள்ளது, எது எப்படியிருப்பினும், 1992, சனவரி 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு காலாண்டுக்கும், ஆனால் 1995, ஒக்றோபர் 1ஆம் திகதிக்குப் முன்னர் அத்துடன் 1995, ஒக்றோபர் 1ஆம் திகதியன்று தொடங்கி 1995, நவெம்பர் 8ஆம் திகதியன்று முடிவடையும் காலப்பகுதிக்கான மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுதலும், விலக்களிக்கப்பட்டதாகவிருத்தலும் வேண்டும்.

9. (அ) இச்சட்டத்தின் 3(1)ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தமானது, எல்லா நோக்கங்களுக்காகவும், 1997, நவெம்பர் 6ஆம் திகதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இச் சட்டத்தின் 3(2)ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தமானது, எல்லா நோக்கங்களுக்காகவும், 1997, யூலை 1ஆம் திகதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

10. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

1998ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க, வரி மற்றும் வெளிநாட்டுச் செலாவணி மன்னிப்புச் சட்டம்

[1998ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே கொண்டிருக்கப்பட்டவையும் அவை தொடர்பில் ஆளொருவரால் விவரத்திரட்டொன்று சமர்ப்பிக்கப்படாதிருக்கின்றதும் அல்லது வருமானவரி விதிப்பனவு தொடர்பிலான சட்டத்தின் கீழ் அத்தகைய ஆளினால் சமர்ப்பிக்கப்பட்ட விவரத்திரட்டொன்றில் வெளிப்படுத்தப்பட்டிராதவையுமான திரட்டிய இலாபங்களையும் வருமானத்தையும் குறித்து நிற்கும் பணங்களை அல்லது எவரேனும் ஆளினால் இலங்கைக்கு வெளியே வைத்திருக்கப்பட்ட இயையான வெளிநாட்டு நாணயத்தை, இலங்கை முதலீட்டுச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட குறித்த சில கம்பெனிகளில் முதலீடு செய்வதனை அல்லது ஏதேனும் வங்கியில் வைப்பிலிடுவதை இயலச்செய்வதற்கும்; அத்தகைய வைப்புக்கள்மீது வரி செலுத்துவதற்கு ஆட்களுக்குள்ள பொறுப்பைக் குறைப்பதற்கும்; வருங்காலத்தில் அத்தகைய ஆட்களை வரிச் சட்டங்களுக்கும் செலாவணிக் கட்டுப்பாடு தொடர்பிலான சட்டத்திற்கும் முழுமையாக இணங்கியொழுகச் செய்யும் நோக்கத்துடன் குறித்த சில வரிகளைச் செலுத்துவதற்கான பொறுப்பிற்கெதிராகவும் அத்துடன் அத்தகைய வரிச்சட்டங்கள் அல்லது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் தொடர்பிலான தவறுகளுக்காகக் குற்றவழக்குத் தொடரப்படுவதற்கு அல்லது தண்டப்பணங்களுக்கெதிராகவும், ஆட்களுக்கு நட்டோத்தரவாதம் அளிப்பதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புடைய அல்லது அவற்றிற்கு இடை நேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

1. இச்சட்டம் 1998ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க, வரி மற்றும் வெளிநாட்டுச் செலாவணி மன்னிப்புச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) இச் சட்டம் (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய -

(அ) வருமான வரியின் அல்லது வருமான வரியின் மீதான மிகை வரியின் விதிப்பனவுக்கு அப்போதைக்கு எற்புடைத்தாகும் சட்டத்தின் கீழ், 1996, மாச்சு 31ஆம் தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ எழுந்த அல்லது திரண்ட ஏதேனும் இலாபம் அல்லது வருமானம் தொடர்பில், 1996, மாச்சு 31ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவுற்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான வருமான வரி செலுத்துவதற்கு ஆளானவராயிருந்தவரும் அத்துடன் ஏதேனும் அத்தகைய வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வருமானத்தின் விவரத்திரட்டொன்றைக் கொடுத்துதவாதவரும் அல்லது ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அவரால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விவரத்திரட்டில் அத்தகைய இலாபங்களை அல்லது வருமானத்தை வெளியிட்டிராதவருமான; அல்லது

(ஆ) இலங்கைக்கு வெளியே ஏதேனும் இயைபான வெளிநாட்டு நாணயத்தை வைத்திருக்கின்றவருமான,

எவரேனும் ஆளுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) இச்சட்டமானது, 1997 நவெம்பர் 6ஆந் தேதியன்று எந்த ஆள் தொடர்பில்-

(அ) 1996, மாச்சு 31ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் எவரேனும் ஆளுக்கு எழுந்த அல்லது திரண்ட அல்லது அவரால் பெறப்பட்ட, விடயத்திற்கேற்ப ஏதேனும் இலாபங்களும் வருமானமும் தொடர்பில் அல்லது மொத்த விற்பனை வரவு தொடர்பில் அப்போதைக்கு வருமானவரி விதிப்பனவுக்கு எற்புடைத்தாகும் சட்டத்தின்கீழ் அல்லது 1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் கீழ் அல்லது 1981ஆம் ஆண்டின் 69ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் கீழ் அல்லது 1991ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வரியை, சார்த்தப்பட்டதான அல்லது சந்தேகிக்கப்பட்டதான ஏதேனும் தட்டிக்கழித்தலுக்காக; அல்லது

(ஆ) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அல்லது 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க, பயங்கரவாதத்ததடை (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின், சார்த்தப்பட்டதான அல்லது சந்தேகிக்கப்பட்டதான மீறுகைக்காக,

ஏதேனும் ட்லனாய்வு முடிவுறாதிருக்கின்றதோ அந்த எவரேனும் ஆளுக்கு ஏற்புடையதாதல் ஆகாது.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவராக அல்லாத, (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வோர் ஆளும், இச்சட்டத்தில் இதனகத்துப் பின்னர் "இச்சட்டம் ஏற்புடையதாகும் ஆளொருவர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்.

3. (1) இச்சட்டம் ஏற்புடையதாகின்றவரும் அத்துடன் -

(அ) ஏதேனும் இயைபான பணங்களைக் கொண்டுள்ளவரும், அல்லது

(ஆ) ஏதேனும் இயைபான வெளிநாட்டு நாணயத்தை வைத்திருக்கின்றவருமான,

ஆளெவரும் -

(i) அத்தகைய இயைபான பணங்களை அல்லது அத்தகைய இயைபான வெளிநாட்டு நாணயத்தை மாற்றுவதன் மூலம் பெறப்பட்ட பணங்களை, ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புமுயற்சியில் மட்டும் ஈடுபட்டுள்ள ஏதேனும் கம்பெனியில், ஏதேனும் உளதாயிருக்கின்ற பங்காக இல்லாத வேறு ஏதேனும் பங்கின் கொள்வனவில், 1997, நவெம்பர் 5ஆம் தேதியின் பின்னர், ஆனால் 1999, யூன் 30ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முதலீடு செய்யலாம்;

(ii) அத்தகைய இயைபான பணங்களை அல்லது அத்தகைய இயைபான வெளிநாட்டு நாணயத்தை மாற்றுவதன் மூலம் பெறப்பட்ட பணங்களை, 1997, நவெம்பர் 5ஆம் தேதியின் பின்னர் ஆனால் 1998, திசெம்பர் 31ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர், ஏதேனும் வங்கியில் வைப்பீடு செய்யலாம் என்பதுடன், அவ்வாறு வைப்பீடு செய்யப்பட்ட பணங்களின் பதினைந்து சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றை (இச்சட்டத்தில் இதனகத்துப் பின்னர் இது "மன்னிப்புவரி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துதலும் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சி" என்பது -

(i) இலத்திரனியல் உற்பத்திப் பொருட்களை அல்லது அத்தகைய உற்பத்திப் பொருட்களுக்கான உறுப்புகளை உற்பத்தி செய்வதற்காக அல்லது பொருத்துவதற்காக;

(ii) மட்பாண்ட உற்பத்திப் பொருட்களின் அல்லது கண்ணாடிப் பொருட்களின் உற்பத்திக்காக;

(iii) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட இறப்பரைப் பயன்படுத்தும் இறப்பர் உற்பத்திப் பொருட்களின் உற்பத்திக்காக;

(iv) ஆபரணங்களின் உற்பத்திக்காக;

(v) இரத்தினக் கற்களை அல்லது வைரக் கற்களை வெட்டுவதற்கும் பட்டை தீட்டுதற்குமாக;

(vi) பாரமற்ற அல்லது கனரகப் பொறியியலுக்காக;

(vii) வீடுகளின் நிர்மாணிப்பு மற்றும் விற்பனைக்காக; அல்லது

(viii) ஏதேனும் ஒரு விடயத்தில் முன்னோடியாகும் இயல்பினதாக இருப்பதாக இலங்கை முதலீட்டுச் சபையால் குறித்தொதுக்கப்பட்ட கைத்தொழிலொன்றாக அல்லது சேவையொன்றாகவிருக்கும் எவையேனும் பொருட்களின் அல்லது பண்டங்களின் உற்பத்திக்காக அல்லது ஏதேனும் சேவையை வழங்குவதற்காக,

1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையால் எந்தக் கம்பெனியுடன் உடன்படிக்கையொன்று செய்துகொள்ளப்பட்டதோ, அந்தக் கம்பெனியொன்றால், கொண்டு நடாத்தப்படும் ஏதேனும் பொறுப்பு முயற்சியென்று பொருள்படும்.

4. இச் சட்டம் ஏற்புடைத்தாகின்றவரும் அத்துடன் -

(அ) பிரிவு 3(1) (i) என்பதற்கிணங்க ஏதேனும் முதலீட்டைச் செய்திருக்கின்றவரும்; அல்லது

(ஆ) பிரிவு 3(1) (ii) என்பதற்கிணங்க ஏதேனும் வைப்பீட்டைச் செய்து, அத்துடன் அதன் மேல் மன்னிப்பு வரியைச் செலுத்தியுள்ளவரும்

அத்துடன் 5ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தோதான வெளிப்படுத்துகையொன்றைச் செய்துள்ளவருமான ஆளெவரும்-

(அ) (i) பிரிவு 3(1) (i) என்பதன் ஏற்பாடுகளுக்கிணங்க முதலீடு செய்யப்பட்ட பணங்களை அல்லது 3(1) (ii)ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க வைப்பீடு செய்யப்பட்ட பணங்களாகவும் அத்துடன் அது தொடர்பில் மன்னிப்புவரி செலுத்தப்பட்டுள்ளதுமாகிய பணங்களைக் குறித்து நிற்கின்றவாறான, 1996, மார்சு 31ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான அவரது இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகம் தொடர்பில், விடயத்திற்கேற்ப, அப்போதைக்கு வருமான வரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தான, சட்டத்தின் கீழ் அல்லது வருமான வரி மீதான மிகை வரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தான சட்டத்தின் கீழ் முறையே செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வருமான வரியை அல்லது வருமான வரி மீதான மிகை வரியை;

(ii) அப்போதைக்கு செல்வ வரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தாகும் சட்டத்தின்கீழும் அப்போதைக்கு செல்வ வரி மீதான மிகை வரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தாகும் சட்டத்தின் கீழும் 1992, மார்சு 31ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு (1)ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அவரது இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய ஏதேனும் பாகத்தைப் பயன்படுத்தி, கொள்ளப்பட்டவாறான அவரது தேறிய செல்வத்தின் அத்தகைய பாகம் தொடர்பில் முறையே செலுத்தப்படற்பாலதான ஏதேனும் செல்வ வரியை அல்லது செல்வ வரி மீதான மிகை வரியை;

(iii) எந்த மொத்த விற்பனை வரவிலிருந்து (i)ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகம் எழுந்ததோ அல்லது பெறப்பட்டதோ அத்தகைய மொத்த விற்பனை வரவு தொடர்பில் 1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின்கீழ் வியாபார மொத்த விற்பனை வரவு வரியை அல்லது 1981ஆம் ஆண்டின் 69ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் கீழ் மொத்த விற்பனை வரவு வரியை அல்லது 1991ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின் கீழ் ஏதேனும் தேசிய பாதுகாப்பு அறவீட்டை,

செலுத்துவதற்கு; அல்லது

(ஆ) (i) 1996, மார்சு 31ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில், (அ) என்னும் பந்தியின் (i)ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அவரது இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகம் சம்பந்தமாக அல்லது தொடர்பில் அல்லது (அ) என்னும் பந்தியின் (ii)ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அவரது தேறிய செல்வத்தினதும் அத்தகைய பாகம் சம்பந்தமாக அல்லது தொடர்பில், அப்போதைக்கு ஏற்புடைத்தான வருமான வரி அல்லது வருமான வரி மீதான மிகை வரி அல்லது செல்வ வரி அல்லது செல்வவரி மீதான மிகை வரி விதிப்பனவிற்கு ஏற்புடைத்தான சட்டத்தின் கீழ்;

(ii) பந்தி (அ) என்பதன் (iii)ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய மொத்த விற்பனை வரவு சம்பந்தமாக அல்லது அது தொடர்பில் 1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்த்தின்கீழ், அல்லது 1981ஆம் ஆண்டின் 69ஆம் இலக்க மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் கீழ் அல்லது 1991ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின் கீழ்;

(iii) இயைபான ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தை மாற்றுவதன் மூலம் பெறப்பட்ட பணங்களைக் கொண்டுள்ளவாறான அவ்வாறு முதலீடு செய்யப்பட்ட அல்லது அவ்வாறு வைப்பீடு செய்யப்பட்ட பணங்களின் அத்தகைய பாகம் தொடர்பில் செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ்,

ஏதேனும் தவறுக்காக குற்றவழக்கொன்றுக்கு அல்லது தண்டப்பணமொன்றுக்கு ஆளாதல் ஆகாது.

5. (1) பிரிவு 3 (1) (i) என்பதற்கிணங்க பணங்களை முதலீடு செய்கின்றவரும் அல்லது 3 (1) (ii)ஆம் பிரிவிற்கிணங்க பணங்களை வைப்பீடு செய்கின்றவரும் அத்துடன் அதன்மீது மன்னிப்பு வரியைச் செலுத்துகின்றவருமான ஒவ்வோராளும், இச்சட்டத்திற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள தோதான படிவத்தில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு வெளிப்படுத்துகையொன்றைச் செய்யலாம்.

(2) உட்பிரிவு (1)இன்கீழ்ச் செய்யப்பட்ட ஏதேனும் வெளிப்படுத்துகையானது அத்தகைய முதலீடானது அல்லது வைப்பீடானது முற்றிலும் அல்லது பகுதியளவில், ஏதேனும் இயைபான வெளிநாட்டு நாணயத்தை மாற்றுவதன்மூலம் பெறப்பட்ட பணங்களாலானதென வெளிப்படுத்துமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி அத்தகைய வெளிப்படுத்துகையின் பிரதியொன்றைச் செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரிக்கு அனுப்புவித்தல் வேண்டும்.

6. இச் சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ள எதுவும், ஏதேனும் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் கீழ் இறுதியானதும் முடிவானதாயுமுள்ள-

(அ) (i) வருமானவரி அல்லது வருமான வரி மீதான மிகை வரி அல்லது செல்வ வரி அல்லது செல்வ வரி மீதான மிகை வரி விதிப்பனவு தொடர்பிலான அப்போதைக்கான சட்டத்தின்; அல்லது

(ii) 1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 1981ஆம் ஆண்டின் 69ஆம் இலக்க மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் அல்லது 1991ஆம் ஆண்டின் 52ஆம் இலக்கத் தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின்,

ஏற்பாடுகளின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் வரிமதிப்பீட்டை;

(ஆ) 1996, மார்ச 31ஆம் தேதிக்கு முன், இச்சட்டம் ஏற்புடைத்தாகும் எவரேனும் ஆள் மீதும் அத்துடன் அவரால் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினது ஏதேனும் மீறுகை தொடர்பிலும் சுமத்தப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டை; அல்லது

(இ) வேறு ஏதேனும் கருமத்தை,

மீளாய்வு செய்வதற்கு அதிகாரமளிப்பதாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதலாகாது.

7. வேறு ஏதேனும் சட்டத்தில் உள்ளது, எது எவ்வாறிருப்பினும், 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 30ஆம் பிரிவின் நோக்கங்களுக்கு, (3)(1)(i)ஆம் பிரிவிற்கிணங்க அவரால் செய்யப்பட்ட ஏதேனும் முதலீடு தொடர்பில் இச்சட்டம் ஏற்புடைத்தாகும் எவரேனும் ஆளுக்கு, கழிப்பனவு எதுவும் அனுமதிக்கப்படுதல் ஆகாது.

8. (1) இச்சட்டத்தின்கீழ், தமது கடமைகளைப் பூரிகையில் தவிரவும், அத்துடன் (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமையவும் உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் அல்லது ஒவ்வொரு வங்கியினதும் அலுவலர் அல்லது ஊழியர் ஒவ்வொருவரும், இச்சட்டத்தை நிருவகிக்கையில் அவரது அறிவுக்கு எட்டக்கூடிய எல்லா விடயங்கள் தொடர்பிலும் இரகசியத்தைப் பேணுதலும், பேணுதலில் உதவுதலும் வேண்டும் என்பதுடன், 3ஆம் பிரிவல் குறிப்பீடு செய்யப்பட்டவாறான ஏதேனும் அத்தகைய முதலீடு அல்லது வைப்பீடு தொடர்பில் எத்தன்மையதுமான ஏதேனும் தகவலை எவரேனும் தனியாளுக்கு, ஏதேனும் கூட்டுத்தாபனத்திற்கு, வங்கிக்கு, நீதிமன்றத்திற்கு, நிறுவனத்திற்கு, தாபனத்திற்கு, திணைக்களத்திற்கு, இலங்கை அரசாங்கத்தின் எவரேனும் அலுவலருக்கு, முகவருக்கு, பிரதிநிதிக்கு அல்லது வேறு எவரேனும் சட்ட ஆளுக்கு அல்லது இயற்கை ஆளுக்குக் கொடுத்தலோ, வெளிப்படுத்துதலோ அல்லது வெளிவிடுதலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், விடயத்திற்கேற்ப ஆணையாளர் தலைமையதிபதி அல்லது செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரி அல்லது வர்த்தக வங்கியின் ஓர் அலுவலர் அல்லது ஊழியர் -

(i) அத்தகைய கருமம் அல்லது தகவல் எந்த ஆள் தொடர்பிலானதோ, அந்த ஆளினால்;

(ii) போதைப்பொருள் அல்லது விமானக்கடத்தல் மீதான சர்வதேச சமவாயமொன்றுக்குப் பயனளிக்கும் ஏதேனும் சட்டத்தின் கீழ் ஏதேனும் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட எவையேனும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில், அச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினால்;

(iii) அப்போதைக்கு வருமான வரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தான சட்டத்தின் கீழ், அவ்வுடன்படிக்கைக்கிணங்க, வருமானத்தின் மீது இரட்டை வரி விதிப்பனவைத் தவிர்ப்பதற்காக எந்த நாட்டுடன் இலங்கை ஏதேனும்உடன்படிக்கையைச் செய்துள்ளதோ, அந்த ஏதேனும் நாட்டின் தகுதிவாய்ந்த அதிகாரியால்; அல்லது

(iv) முன்றாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் முதலீட்டை அல்லது வைப்பீட்டைக் குறிக்கும் பணங்கள் 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான தவறொன்றாக அமையும் செயலொன்றை முன்னெடுத்துச்

செல்வதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன அல்லது பயன்படுத்தப்படுகின்ற என்ற ஏதுவின் மீது அதற்கான விண்ணப்பமொன்றின் மீது செய்யப்பட்ட உயர் நீதிமன்றக் கட்டளையொன்றினால்,

அவ்வாறு செய்யுமாறு அவர் தேவைப்படுத்தப்படின், இச்சட்டத்தை நிருவகிக்கையில் அவரது அறிவுக்கு எட்டியுள்ள ஏதேனும் கருமத்தை அல்லது தகவலை அத்தகைய தெரிவிப்பு, அத்தகைய தேவைப்பாட்டிற்கு அல்லது நீதிமன்றக் கட்டளைக்கு இணங்கியொழுகும் நோக்கங்களுக்குக் கண்டிப்பாக அவசியப்படக்கூடிய வாறான அத்தகைய அளவுக்கு, அத்தகைய ஆளுக்கு அல்லது நீதிமன்றத்திற்குத் தெரிவித்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயற்படுகின்ற உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின், செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் அல்லது வங்கியின் எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் இச்சட்டத்தின் கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னிலையில் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

9. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

10. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி –

"வங்கி" என்பது 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட அல்லது உரிமமளிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் வங்கி, அல்லது 1971ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தால் தாபிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கி என்று பொருள்படும்;

"ஆணையாளர் தலைமையதிபதி", "தேறிய செல்வம்", "இலாபங்களும் வருமானமும்", "வரிமதிப்பீட்டாண்டு" என்பன 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் முறையே அவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்டவாறான பொருள்களைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"இலங்கை முதலீட்டுச் சபை" என்பது, 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபை என்று பொருள்படும்;

"செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரி" என்பது, மத்திய வங்கியின் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் தலைவராகப் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அலுவலர் என்று பொருள்படும் என்பதுடன், அவருக்கு உதவியாளராக பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அலுவலரொருவரையும் உள்ளடக்கும்;

"செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்" என்பது (423ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் என்று பொருள்படும்;

"வெளிநாட்டு நாணயம்" என்பது இலங்கை நாணயத்தைத் தவிர்ந்த வேறு ஏதேனும் நாணயம் என்று பொருள்படும் என்பதுடன் இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிவுள்ள ஆளொருவருக்கு அவரது ஓய்வூதியம் தொடர்பில் அல்லது அவருக்கு வருமதியான வேறு பணிக்கொடைகள் தொடர்பில் ஒரு வெளிநாட்டு அரசாங்கத்ததால் அல்லது நிறுவனத்தால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் நாணயத்தையும் அத்துடன் இலங்கை நாணயத்தைத் தவிர்ந்த வேறு எதேனும் நாணயத்தில் செலுத்தப்படற்பாலதான எல்லா வைப்பீடுகளையும் வரவுகளையும் மீதிகளையும் அத்துடன் இலங்கை நாணய்தில் வெளிப்படுத்தப்பட்டவை அல்லது வரையப்பட்ட ஆனால், இலங்கை நாணயம் தவிர்ந்த எனைய நாணயத்தில் செலுத்தப்படற்பாலதான அத்தகைய எவையேனும் உண்டியல்களையும், பிரயாணிகள் காசோலைகளையும், நாணயக் கடிதங்களையும் அத்துடன் நாணய மாற்று உண்டியல்களையும் உள்ளடக்கும்;

"இரத்தினக் கல்" என்பது 1993ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க, தேசிய இரத்தினக் கல், ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட ஓர் இரத்தினக் கல் என்று பொருள்படும்;

"ஆபரணம்" என்பது 1993ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட ஆபரணம் என்று பொருள்படும்;

"ஆள்" என்பது ஒரு கம்பெனியை, ஆட்கள் குழுவொன்றை அல்லது பங்காண்மையொன்றை உள்ளடக்கும்;

"இயைபான வெளிநாட்டுச் செலாவணி" என்பது, ஆளொருவர் தொடர்பில், 1996, மார்சு 31ஆம் தேதியன்று அத்தகைய ஆளினால், இலங்கைக்கு வெளியே செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறி, கொடை, நன்கொடை, மரபுரிமை என்ற வகையில் அல்லது வேறு வகையில் அவரால் இலங்கைக்கு வெளியே கொள்ளப்பட்ட இலாபங்களும் வருமானமுமாக உள்ள அல்லது இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் ஏற்றிக் கூறப்படற்பாலதான அல்லது இலாபங்களும் வருமானமுமாக அல்லாத அல்லது இலாபங்களுக்கும் வருமானங்களுக்கும் ஏற்றிக்கூறப்படற்பாலதல்லாத வெளிநாட்டுச் செலாவணி என்று பொருள்படும்;

"இயைபான பணம்" என்பது, ஆளொருவர் தொடர்பில், அத்தகைய ஆளினால் 1996, மார்சு 31 ஆம் தேதியன்று இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வைத்திருக்கப்படுவதும், 1996, மார்சு 31ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய ஆளுக்குச் சேர்ந்த அல்லது திரண்ட அல்லது அவரால் பெறப்பட்ட திரண்ட இலாபங்களை அல்லது வருமானத்தைக் குறிக்கின்றதும் அத்துடன் எந்த இலாபங்களும் வருமானமும் தொடர்பில் அப்போதைக்கு வருமான வரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தாகும் சட்டத்தின் கீழ் அத்தகைய ஆள் வருமானத்தின் விவரத் திரட்டொன்றைக் கொடுத்துதவாதிருக்கின்றாரோ அந்த இலாபங்களையும் வருமானத்தையும் குறித்து நிற்கும் அல்லது அத்தகைய ஆளினால் கொடுத்துதவப்பட்ட வருமான விவரத்திரட்டொன்றில் வெளிப்படுத்தப்படாத இலாபங்களையும் வருமானத்தையும் குறித்து நிற்கும் எவையேனும் (இயைபான வெளிநாட்டு நாணயம் அல்லாத) பணங்கள் என்று பொருள்படும்;

"அப்போதைக்கு வருமான வரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தாகும் சட்டம்" என்பது 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் என்று பொருள்படும்.

"அப்போதைக்கு வருமான வரி மீதான மிகை வரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தாகும் சட்ம்" என்பது 1982ஆம் ஆண்டின் 26ஆம்இலக்க, வருமான வரி மீதான மிகை வரிச் சட்டம், 1984ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகை வரிச் சட்டம் அத்துடன் 1989ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, வருமான வரி மீதான மிகை வரிச் சட்டம் என்று பொருள்படும்;

"அப்போதைக்கு செல்வவரிஅல்லது செல்வவரி மீதான மிகைவரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தாகும் சட்டம்" என்பது 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்ம், 1982ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, செல்வ வரி மீதான மிகை வரிச்சட்டம், அத்துடன் 1989ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க செல்வ வரி மீதான மிகை வரிச் சட்டம் என்று பொருள்படும்;

"மொத்த விற்பனை வரவு" அத்துடன் "காலாண்டு" என்பன 1981ஆம் ஆண்டின் 69ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தால் முறையே அவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்ட பொருள்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அட்டவணை (பிரிவு 5)

பாகம் I - பணத்தை பங்குகளில் முதலீடு செய்யும் ஆட்களினால் கொடுத்துதவப்பட வேண்டியது

1998ஆம் ஆண்டின் .....ஆம் இலக்க வரி மற்றும் வெளிநாட்டுச் செலாவணி மன்னிப்புச் சட்டம்

5ஆம் பிரிவின் கீழான வெளிப்படுத்துகை

வருமான வரிக்கோப்பு இல. (ஏதேனும் இருப்பின்): .....

மொத்த விற்பனை வரவு வரிக் கோப்பு இல. (ஏதேனுமிருப்பின்): .....

தேசிய அடையாள அட்டை இலக்கம் (தனியாளாயின்): .....

கம்பெனி/ பங்காண்மைப் பதிவு இலக்கம்: .....

..... என்னும் இடத்தைச் சேர்ந்த திரு/ திருமதி/ செல்வி: .....

(முகவரி) (முழுப்பெயர்/ பெயர்கள்)

ஆகிய நான்/ நாங்கள்: ....

(கம்பனியின் அல்லது பங்காண்மையின் பெயர்) (பதவிப் பெயர்)

என்ற வகையில் -

(1) 1998ஆம் ஆண்டின் .....ஆம் இலக்க, வரி மற்றும் வெளிநாட்டுச் செலாவணி மன்னிப்புச் சட்டத்தின் நியதிகளின்படி முற்றிலும்

(i) என்னால்/ கம்பெனியால்/ பங்காண்மையால் இலங்கையில் வைத்திருக்கப்படும் வேறு பணமாகிய ரூபா ..... (ரூபா .....)

(ii) இலங்கை வெளிநாட்டு நாணயத்தின் மாற்றத்தின் மூலம் பெறப்பட்ட ரூபா ..... (ரூபா .....)

அடங்கிய ரூபா ..... (ரூபா .....) பணத்தொகையொன்றை இலங்கை முதலீட்டுச் சபையால் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியொன்றென இனங்காணப்பட்டதும் அத்துடன் இலங்கை முதலீட்டுச் சபையுடன் 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் ..... ஆந் தேதியில் ..... ஆம் இலக்க உடன்படிக்கையைச் செய்துகொண்டுள்ளதுமான கம்பெனியொன்றாகிய ..... இல் ..... பங்குகளை (ஏற்கெனவே உளதாகவிராத பங்குகள்) ..... ஆந் தேதியில் முதலிட்டுள்ளேன்/ முதலிட்டுள்ளோம் என வெளிப்படுத்துகின்றேன்/ வெளிப்படுத்துகின்றோம்.

.....

வெளிப்படுத்துபவர்/ வெளிப்படுத்துபவர்கள்
ஒப்பம்/ ஒப்பங்கள்

வெளிப்படுத்துகை தனியாரொருவரல்லாத வேறு
வகையிலாயின் பதவிப் பெயர்

தேதி: .....

பாகம் II - பணத்தை வங்கிகளில் வைப்பீடு செய்யும் ஆட்களால் கொடுத்துதவப்பட வேண்டியது

1998ஆம் ஆண்டின் .....ஆம் இலக்க, வரி மற்றும் வெளிநாட்டுச் செலாவணி மன்னிப்புச் சட்டம்

5ஆம் பிரிவின் கீழான வெளிப்படுத்துகை

வருமான வரிக்கோப்பு இல. (ஏதேனும் இருப்பின்): .....

மொத்த விற்பனை வரவு வரிக் கோப்பு இல. (ஏதேனுமிருப்பின்): .....

தேசிய அடையாள அட்டை இலக்கம் (தனியாளாயின்): .....

கம்பெனி/ பங்காண்மைப் பதிவு இலக்கம்: .....

..... என்னும் இடத்தைச் சேர்ந்த திரு/ திருமதி/ செல்வி: .....
(முகவரி) (முழுப்பெயர்/ பெயர்கள்)

ஆகிய நான்/ நாங்கள்: ....
(கம்பனியின் அல்லது பங்காண்மையின் பெயர்) (பதவிப் பெயர்)

என்ற வகையில் -

(1) 1998ஆம் ஆண்டின் .....ஆம் இலக்க, வரி மற்றும் வெளிநாட்டுச் செலாவணி மன்னிப்புச் சட்டத்தின் நியதிகளின்படி முற்றிலும்

(i) என்னால்/ கம்பெனியால்/ பங்காண்மையால் இலங்கையில் வைத்திருக்கப்படும் வேறு பணமாகிய ரூபா ..... (ரூபா .....)

(ii) இலங்கை வெளிநாட்டு நாணயத்தின் மாற்றத்தின் மூலம் பெறப்பட்ட ரூபா ..... (ரூபா .....)

அடங்கிய ரூபா ..... (ரூபா .....) பணத்தொகையொன்றை ..... தொடக்கம் ..... வரையில் ..... ஆம் இலக்கம் கொண்ட எனது/ எமது கம்பெனியின் கணக்கில் வைப்பீடு செய்துள்ளேன்/ செய்துள்ளோம் எனவும் அத்துடன் அச்சட்டத்தின் 3ஆம் பிரிவின் நியதிகளின்படி அதன் மீதான வரியைச் செலுத்தியுள்ளேன்/ செலுத்தியுள்ளோம் என வெளிப்படுத்துகின்றேன்/ வெளிப்படுத்துகின்றோம்.

.....

வைப்பிலிடுபவரின்/ வைப்பிலிடுபவர்களின்
ஒப்பம்/ ஒப்பங்கள்

வெளிப்படுத்துகை தனியாரொருவரல்லாத வேறு
வகையிலாயின் பதவிப் பெயர்

தேதி: .....

1998ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம், 1998ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 24ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 8ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் –

(அ) அப்பந்தியின் (XXIV அ) என்னும் உட்பந்தியில் "1989 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1989 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1997 ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கும் அத்துடன் 1997 ஏப்பிறல் 1ஆம் தேதி தொடங்கி, 1997 திசெம்பர் 31ஆம் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதிக்கும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அப்பந்தியின் (LXXIII) என்னும் உட்பந்தியில் "இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(இ) அப்பந்தியின் (LXXIII) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்;

"(LXXIV) 1997ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, பண்டாரநாயக்க நூதனசாலைக் குழு (கூட்டிணைத்தல்) சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட பண்டாரநாயக்க நூதனசாலைக்குழு";

(LXXV) 1992ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க, சுரங்கங்கள் கனிப் பொருட்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட புவிச்சரிதவியல் நில அளவை மற்றும சுரங்கங்கள் பணியகம்.".

(2) அப்பிரிவின் (உ) என்னும் பந்தியில் "இலாபங்களும் வருமானமும்" என்னும சொற்களுக்குப் பதிலாக, "இலாபங்களும் வருமானமும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் இறுதியில் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் –

"(ஊ)(i)ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு, 1996 திசெம்பர் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பின் அல்லது பரஸ்பர நிதியத்தின் இலாபங்களும் வருமானமும், அதாவது அத்தகைய இலாபங்களினதும் வருமானத்தினதும் எழுபத்தைந்து சதவீதத்திற்குக் குறையாமல் அவ்வரிமதிப்பீட்டாண்டின் இறுதியிலிருந்து ஓராண்டு முடிவடைவதற்கு முன்னர், அதன் கூறுவைத்திருப்பவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுமாயின்;

(ii) அப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பின் அல்லது பரஸ்பர நிதியத்தின், 22ஈஈஈஈ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் ஏழு ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதி முடிவுறும் வரிமதிப்பீட்டாண்டின் கடைசி நாளை உடனடுத்து வரும் நாளன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான இலாபங்களும் வருமானமும் அதாவது அத்தகைய இலாபங்களினதும் வருமானத்தினதும் எழுபத்தைந்து சதவீதத்திற்குக் குறையாமல் முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட வரிமதிப்பீட்டாண்டின் முடிவிலிருந்து

ஓராண்டு முடிவுறுவதற்கு முன்னால் அதன் கூறு வைத்திருப்பவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுமாயின்:"

3. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 24ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 9ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் (viii)ஆம் உட்பந்தியில் "ஜப்பான் கடல்கடந்த பொருளாதாரக் கூட்டுறவு நிதியம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக,"ஜப்பான் கடல்கடந்த பொருளாதாரக் கூட்டுநிதியம் அல்லது அதன் நிகழ்ச்சித் திட்டங்களில் இலங்கைக்குத் தொழில்நுட்பக் கூட்டுறவை வழங்கும் பொதுநலச் சமவாயச் செயலகம்:" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (ச) என்னும் பந்தியில் "ஏதேனும் பணத்தொகையின் அத்தகைய பாகம்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் பணத்தொகையின் அத்தகைய பாகம்:" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அவ்வுட்பிரிவின் (ஞ) என்னும் பந்தியில் "ஏதேனும் பணத்தொகையின் பாகம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் பணத் தொகையின் அத்தகைய பாகம்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(4) அவ்வுட்பிரிவின் (ஞ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(ட) எவரேனும் ஊழியருக்கு அத்தகைய ஊழியரின் தொழில் தருநரால் -

(i) ஆணையாளர்- தலைமை அதிபதியின் அபிப்பிராயப்படி எவரேனும் ஆளின் தொழில் தருநரால் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள எல்லா ஊழியர்களுக்கும் ஒரே சீராக ஏற்புடைத்தான செயற் திட்டமொன்றிற்கிணங்க அத்தகைய ஆளினால் அத்தகைய பதவியில் அல்லது தொழிலிலிருந்து 1997 நவெம்பர் 6ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தன்னிச்சையான இளைப்பாறலின் விளைவாக அத்தகைய ஆளுக்குச் செலுத்தப்படும் ஏதேனும் பதவியின் அல்லது தொழிலின் இழப்பிற்காக நட்டஈடாகச் செலுத்தப்படும் பணத்தொகையாகிய ஏதேனும் பணத்தொகை.".

(ii) தொழில் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட செயற்றிட்டமொன்றிற்கிணங்க 1997 நவெம்பர் 6ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய தொழில்தருநரால் அத்தகைய ஊழியளரின் ஆட்குறைப்பின் விளைவாக,

தொழிலின் ஏதேனும் பதவி இழப்பிற்கு நட்டஈடாக அத்தகைய ஊழியருக்குச் செலுத்தப்பட்ட பணத்தொகையொன்றாகச் செலுத்தப்படும் ஏதேனும் பணத்தொகை."

4. ஆயிரத்துத் தொளியிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 24ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (எ) என்னும் பந்தியில் "பணங்களின்மீது அவருக்குச் சேரும் வட்டியும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பணங்களின் மீது அவருக்குச் சேரும் வட்டியும்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (எ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

(எ) ஏதேனும் நிதி நிறுவனத்திற்கு, அதனால் அரசாங்கத்தின் ஏதேனும் தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கெனத் தாபிக்கப்பட்ட ஏதேனும் முயற்சியுடைய முலதனக் கம்பெனிக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் கடனின் வருவாய்கள் அத்தகைய கம்பெனியால் அத்தகைய நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டிருப்பின், அத்தகைய கடனிலிருந்து திரளும் வட்டி.

இப்பந்தியின் நோக்கத்திற்கு "நிதி நிறுவனம்" என்பது எந்தக் கம்பெனியின் தொழில் அல்லது அதன் தொழிலின் ஒரு பாகம், தொகுதிக்கடன் அல்லது முறி என்ற வடிவத்தில் அல்லது வேறு ஏதேனும் வடிவத்தில் வைப்பீடுகள் அல்லது கடன் என்ற வகையில் பணத்தை

ஏற்றுக் கொள்ளலும் அதன்மீதான வட்டிக் கொடுப்பனவும் அடங்கியுள்ளனவோ அந்தக் கம்பெனி என்று பொருள்படும்.".

5. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 24ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 11ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (அஅஅ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(அஅஅஅ) எந்தக் கம்பனியுடன் 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை தேசிய அரசுப் பேரவைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ இலங்கை முதலீட்டுச் சபையால் உடன்படிக்கையொன்று செய்துகொள்ளப்பட்டுள்ளதோ அந்தக் கம்பனியால், கட்டணம் செலுத்துவோரும் கட்டணம் செலுத்தாதவர்களுமான நோயாளர்களுக்கு உள்ளக மற்றும் வெளிநிலைச் சிகிச்சைக்கான வசதிகளைக் கொண்ட மருத்துவமனையொன்றின் தொழிற்பாடுகளிலிருந்து அத்தகைய மருத்துவமனைத் தொழிற்பாடுகளைத் தொடங்கிய வரிமதிப்பீட்டாண்டு" தொடக்கம் கணிக்கப்பட்ட ஐந்தாண்டுகளைக்கொண்ட காலப்பகுதியின்போது அத்தகைய ஏதேனும் கம்பனியின் இலாபங்களிலிருந்து செலுத்தப்பட்ட ஏதேனும் பங்கிலாபம்:

(அஅஅஅஅ) (i) எந்தக் கம்பனியுடன் 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை தேசிய அரசுப் பேரவைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையால் உடன்படிக்கையொன்று செய்யப்பட்டுள்ளதோ அந்தக கம்பனியும், அத்துடன்

(ii) எந்தக் கம்பனிக்கு 1992ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அகழ்வுரிமமொன்று அத்தகைய கம்பனியின் எவரேனும் பங்குதாரருக்குச் சாட்டுதல் செய்யப்பட்டுள்ளதோ-

அந்தக் கம்பனியால், 3(அ) என்னும் பிரிவின் கருத்தெல்லைக்குள்ளான இலாபங்களிலிருந்து, அக்கம்பனியின் அத்தகைய எவ்விலாபங்களும், வருமானமும், உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்டவாறு, 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க தேசிய அரசப் பேரவைச் சட்டத்தின் 24ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு 1998ஆம் ஆண்டின் மாச்சு 19ஆந் தேதியிடப்பட்ட 1019/18ஆம் இலக்கமிடப்பட்ட கசெற்றில் வெளியிடப்பட்டுக் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1995ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் 2ஆம் ஒழுங்குவிதியின் (iv)ஆம் பந்தியின் மேலுமான காப்புவாசகத்தின் (அ) என்னும் உட்பந்திக்கிணங்கத் தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகைய வீதங்களில் வருமானவரி விதிக்கப்படற்பாலதோ அந்தக் காலப்பகுதியின்போது அல்லது அதன் பின்னர் ஒரு வருடத்தினுள் அந்தக் கம்பனியால் அத்தகைய கம்பெனியின் எவரேனும் பங்குதாரருக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் பங்கிலாபம்.".

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "17ஔ, 18" என்னும் இலக்கங்களுக்கும் எழுத்துக்களுக்கும் பதிலாக, "17ஔ, 17ஔ, 17க, 18" என்னும் இலக்கங்களையும் எழுத்துக்களையும் இடுவதன் மூலமும்.

6. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 24ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 14ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், அப்பந்தியின் (xxi)ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் :-

(xxii) எவரேனும் ஆளினால் எந்தக் கம்பனியின் பங்குகள் இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக் குழுவால் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையால் வெளியிடப்பட்ட ஏதேனும் அலுவலக முறையான நிரலில், அப்பங்குகள் 1999 மாச்சு 31ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன் அவ்வாறு விலைகோரப்பட்டிருப்பின், விலை

கோரப்படுகின்றனவோ அந்தக் கம்பனியாகிய ஏதேனும் கம்பனியில் வைத்திருக்கப்படும் ஏதேனும் பங்கு அவரால் 1997 நவெம்பர் 6ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1999 ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னா விற்பனை செய்யப்படுமிடத்து, அவ்விற்பனையின்மீது,

(xxiii) ஏதேனும் கம்பனியால் வழங்கப்பட்டதும் அத்தகைய ஆளினால் வைத்திருக்கப்படுவதுமாகிய ஏதேனும் முறி, தொகுதிக்கடன் அல்லது வேறு கடன் சாதனம் அதாவது அதன் விற்பனையின் நேரத்தில் இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவால் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையால் வெளியிடப்பட்ட ஏதேனும் அலுவலக முறையாக நிரலில் விலைகோரிப் பெறப்பட்ட முறி, தொகுதிக்கடன் சாதனம், 1997 நவெம்பர் 6ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் அத்தகைய ஆளினால் விற்பனை செய்யப்படுமிடத்து அவ்விற்பனையின் மீது;".

7. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றாறாம் ஆண்டின் 16ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 15ஆம் பிரிவு; இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (கக) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம்:-

"(ககக) மூன்றாம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குள் 1998 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் எவரேனும் ஆளுக்கு தங்கத்தின், இரத்தினக்கற்களின் அல்லது ஆபரணத்தின் விற்பனையின்றெழும் இலாபங்களும் வருமானமும்;

(2) அப்பந்தியின் (ய) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும பந்தியை இடுவதன் மூலமும்:-

"(யய) கம்பனியொன்றினால் வழங்கப்பட்டதும் அத்தகைய விற்பனையின் நேரத்தில் இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவால் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையால் வெளியிடப்பட்ட ஏதேனும் அலுவலக முறையான நிரலில் விலைகோரப்பட்டதுமான அவரால் வைத்திருக்கப்படும் முறி, தொகுதிக்கடன் அல்லது வேறு கடன் சாதனமொன்றாக உள்ளதுமான ஏதேனும் முறியில், தொகுதிக் கடனில் அல்லது வேறு கடன் சாதனத்திலிருந்து 1997 நவெம்பர் 6ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் எவரேனும் ஆளினால் பெறப்பட்ட அல்லது அவருக்குத் தேறுகின்ற அல்லது திரளுகின்றதானதுமான 3ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட்ட எவையேனும் இலாபங்களும் வருமானமும்.";

(3) அப்பிரிவின் (ர) என்னும் பந்தியில் "லொத்தரிலிருந்து கிடைக்கும் இலாபங்களும் வருமானமும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "லொத்தரிலிருந்து கிடைக்கும் இலாபங்களும் வருமானமும்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

(4) அப்பிரிவின் (ல) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்திகளைச் சேர்ப்பதன் மூலம்:-

"(வ) அரசாங்கத்தால் தாபிக்கப்பட்டு நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் 114ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட வெண்தாமரை இயக்கத்தால் ஏதேனும் வர்த்தக வங்கியில் வைப்பிலிடப்பட்ட ஏதேனும் பணத்தொகையின்மீது வட்டி அல்லது கழிவு; ஆகியனவாக, "வெண்தாமரை" இயக்கத்திற்குத் திரளும் ஏதேனும் வட்டி அல்லது கழிவு;

(வவ) மூன்றாம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குள் 1998 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் எவரேனும் முதனிலை வியாபாரிக்குக் கிடைக்கும் அல்லது தீரளும் இலாபங்களினதும் வருமானத்தினதும் இயைபான பாகம்."

இப்பந்தியின் நோக்கங்களுக்கு -

(i) இலாபங்கள் மற்றும் வருமானம் தொடர்பிலும் எவரேனும் முதனிலை வியாபாரி தொடர்பிலும் "இயைபான பாகம்" என்னும் சொல்லமைப்பு; பதிவு; செய்யப்பட்ட பங்குத் தொகுதிகள், பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டதும் அத்தகைய முதனிலை வியாபாரியால் வைத்திருக்கப்பட்டதுமான ஏதேனும் திறைசேரி உண்டியலில், திறைசேரி முறியில் பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதியில் அல்லது வேறு பிணையத்தில் இரண்டாம் நிலைச் சந்தையிலான வியாபாரத்திலிருந்து, அத்தகைய உண்டியல், முறி,

பங்குத் தொகுதி அல்லது வேறு பிணையம் அத்தகைய முதனிலை வியாபாரியால் வைத்திருக்கப்படும் காலப்பகுதிக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதாகின்றவாறு அத்தகைய உண்டியல், முறி, பங்குத்தொகுதி அல்லது வேறு பிணையம் முதிர்ச்சியடையும்வரை அத்தகைய உண்டியல், முறி, பங்குத்தொகுதி அல்லது வேறு பிணையம் அத்தகைய முதனிலை வியாபாரியால் வைத்திருக்கப்பட்டிருப்பின் அல்லது உண்டியல், முறி, பங்குத்தொகுதி அல்லது வேறு பிணையம் தொடர்பில் திரண்டிருக்கக்கூடிய வட்டியின் அல்லது கழிவின் அத்தகைய பாகத்தை அத்தகைய இலாபங்களிலும் வருமானத்திலுமிருந்து கழிப்பனவு செய்த பின்னர் அத்தகைய முதனிலை வியாபரியின் இலாபங்களும் வருமானமும் என்று பொருள்படும்.

(ii) "முதனிலை வியாபாரி" என்னும் சொல்லமைப்பு உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் அல்லது பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதிகள், பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் இலங்கை மத்திய வங்கியின் பணச்சபையால் நியமிக்கப்பட்டு அத்துடன் திறைசேரி உண்டியல்களில, திறைசேரி முறிகளில், பதிவுசெய்யப்பட்ட பங்குத் தொகுதியில் அல்லது வேறு பிணையத்தில் முதனிலை வியாபாரியொருவராகச் செயற்படும் எவரேனும் நிதியாளர் அல்லது ஏதேனும் வங்கி என்று பொருள்படும்.".

8. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 24ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஒஒ என்னும் பிரிவு அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(i) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம்:-

"(ஆ) இப்பிரிவு ஏற்புடைத்தாகும் கம்பனியொன்றாக -

(i) 1998 மாச்சு 31ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அதன்பொருட்டு 1997 திசெம்பர் 31ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் செய்யப்பட்ட எழுத்திலான விண்ணப்பமொன்றின் மீது,

(ii) 2000 மாச்சு 31ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அதன் பொருட்டு 1997 திசெம்பர் 31ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால், 1999 திசெம்பர் 31ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அதன் பொருட்டு எழுதில் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மீது

கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளையின் மூலம் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதும்;".

(2) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்திக்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:

"(ஈ) அக்கம்பனியால் கொண்டு நடாத்தப்படும் பொறுப்பு முயற்சியின் பாவனைக்கென ஏதேனும் பொறித் தொகுதியின், பொறியின், இணைப்புகளின் அல்லது உபகரணததின் கொள்வனவில் நான்கு மில்லியன் ரூபாவுக்குக் குறையாமல்,

(i) பந்தி (ஆ) என்பதன் (i)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பனியொன்றின் விடயத்தில் 1998 திசெம்பர் 31ஆம் தேதிக்கு முன்னரும்; அத்துடன்

(ii) பந்தி (ஆ) என்பதன் (ii)ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பனியொன்றின் விடயத்தில் 2000 திசெம்பர் 31ஆம் தேதிக்கு முன்னரும்,

முதலீடு செய்திருப்பதும்.".

9. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 24ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஓஒ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம்:

"(அ) இப்பிரிவு ஏற்புடைத்தாகும் பொறுப்பு முயற்சியொன்றாக,

(i) 1997 திசெம்பர் 31ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் அதன்பொருட்டு எழுத்தில் செய்யப்படும் விண்ணப்பமொன்றின்மீது 1998 மார்ச்சு 31ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்; அல்லது

(ii) 1997 திசெம்பர் 31ஆம் தேதியின் பின்னர் ஆனால் 1999, திசெம்பர் 31ஆம் தேதிக்கு முன்னர் அதன் பொருட்டு எழுத்தில் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மீது 2000 மார்ச்சு 31ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னா -

கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதும்":

(2) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம்:-

"(ஆ) இயைபான தேதி என்பதன் சொல்லமைப்பு, -

(i) இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i)ஆம் உட்பந்திக்கிணங்க அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சி தொடர்பில் 1996, நவெம்பருக்கு முந்தியதல்லாத ஆனால் 1998, ஏப்பிறலுக்குப் பிந்தாத ஏதேனும் பஞ்சாங்க மாதத்தின் முதலாம் நாள் என்று பொருள்படும்;

(ii) இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii)ஆம் பந்திக்கிணங்க அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சி தொடர்பில் 1997, நவெம்பருக்கு முந்தியதல்லாத, ஆனால் 2000, ஏப்பிறலுக்குப் பிந்தாத ஏதேனும் பஞ்சாங்க மாதத்தின் முதலாவது நாள் என்று பொருள்படும்.

என்பதுடன், அத்தகைய பொறுப்பு முயற்சியினால் அத்தேதி தேர்ந்தெடுக்கப்பட்டதுமாதல் வேண்டுமென்பதுடன், அம்மாதத்தின் கடைசி நாளிலிருந்து முப்பது நாட்களுக்குப் பிந்தாமல் ஆணையாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் அறிவிக்கப்படுதலும் வேண்டும்;

ஆயினும் இயைபான தேதி ஆணையாளர்-தலைமையதிபதிக்கு அவ்வாறு அறிவிக்கப்படாதவிடத்து-

(i) இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i)ஆம் உட்பந்திக்கிணங்க அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சி தொடர்பிலான இயைபான தேதி 1997, ஏப்பிறல் 1ஆந் தேதியாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ii) இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) உட்பந்திக்கிணங்க அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சி தொடர்பிலான இயைபான தேதி 1999, ஏப்பிறல் 1ஆம் தேதியாகக் கருதப்படுதல் வேண்டும்.".

10. பிரிவு 17ஓஓ என்பதன் முடிவில் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை முறையே முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஓஉ, 17ஓ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"குறித்த சில சேவைகளுக்கு ஏற்பாடு செய்வதற்கான ஏதேனும் பொறுப்பு முயற்சியின் இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் வருமான வரியிலிருந்து விலக்களிப்பு.

17ஓஉ. முன்றானம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குள், குளிரூட்டப்பட்ட போக்குவரத்து அல்லது குளிரறைக் களஞ்சிய சேவைகளை அல்லது அதற்குத் துணையான வேறு சேவைகளை ஏற்பாடு செய்யும் எவரேனும் ஆளின் அல்லது பங்குடமையின் இலாபங்களும் வருமானமும் (முலதனச் சொத்துக்களின் விற்பனையிலிருந்தான எவையேனும் இலாபங்களையும் வருமானத்தையும் தவிர) -

(அ) 1998 ஏப்பிறல் 1ஆம் தேதியிலிருந்து; அல்லது

(ஆ) அத்தகைய பொறுப்பு முயற்சித் தொழிலைக்கொண்டு நடாத்தத் தொடங்கிய வரிமதிப்பீட்டாண்டின் தொடக்கத்திலிருந்து

அதாவது இவற்றுள் எது பிந்தியதோ அதிலிருந்து கணிப்பிடப்பட்ட ஐந்தாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

பெருந்தோட்டத்துறை சாராத கமத்தொழிற் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஏதேனும் கம்பெனியின் இலாபங்களினதும் வருமானத்தினதும் வருமான வரியிலிருந்து விலக்களிப்பு.

17க.(1) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியிலிருந்து மூன்றாம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குள்வரும் ஏதேனும் கம்பெனியின் இலாபங்களும் வருமானமும் (மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலிருந்தான எவையேனும் இலாபங்களையும் வருமானத்தையும் தவிர) 32ஈஈஈஈ என்னும் பிரிவின் ஏற்பாடுகளில் முரணானது எது ஏப்படியிருப்பினும்–

(அ) 1998 ஏப்பிறல் 1ஆம் தேதியிலிருந்து; அல்லது

(ஆ) அத்தகைய கம்பனி தொழிலைக் கொண்டு நடாத்தத் தொடங்கிய வரிமதிப்பீட்டாண்டின் தொடக்கத்திலிருந்து

அதாவது இதில் எது பிந்தியதோ அதிலிருந்து கணிப்பிடப்பட்ட பத்து ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக ஏதேனும் கம்பனி தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியானது, அத்தகைய கம்பனியால் கொண்டு நடாத்தப்படுவதும் –

(அ) தேயிலை, இறப்பர், தென்னை என்பவற்றைத் தவிர எத்தகைய விவரணத்தினதுமான செடிகளைக் கொண்ட காணியில் பயிர்செய்வதில்; அல்லது

(ஆ) பந்தி (அ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட பயிர்ச்செய்கைக்கு உயர்தரத்தினவாக கமத்தொழிலற் திணைக்களத்தால் சான்றுபடுத்தப்பட்ட நடுகைப்பொருட்களின் உற்பத்தியில்; அல்லது

(இ) பந்தி (அ)வில் குறிப்பீடு செய்யப்பட்ட காணியல் பயிர்ச்செய்கைக்காக நடுகைப் பொருட்களின் தரத்தையும் தன்மையையும் மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சிப் பணியை மேற்கொள்வதில்.

ஈடுபட்டுள்ளதுமான பொறுப்பு முயற்சியொன்று" என்று பொருள்படும்.".

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20இ என்னும் பிரிவின் முடிவில் இத்தால் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஈ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும்:-

"பசுமைமாறாத அல்லது பதனிடப்பட்ட காய்கறிகளை அல்லது பழங்களை ஏற்றுமதி செய்வதும் அத்துடன் காய்கறிகளை அல்லது பழங்களைப் பயிரிடுவதுமான கம்பெனியொன்றின் இலாபங்களினதும் வருமானத்தினதும் வருமான வரியில் இருந்து விலக்களிப்பு.

20ஈ. (1) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியிலிருந்து மூன்றாம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குள் வரும் ஏதேனும் கம்பனியின் இலாபங்களும் வருமானமும் (மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலிருந்தான எவையேகும் இலாபங்களைத் தவிர) அத்தியாயம் VIIIஅ என்பதில் முரணானது எது எவ்வாறிருப்பினும் –

(அ) 1998 ஏப்பிறல் 1ஆம் தேதியிலிருந்து; அல்லது

(ஆ) அத்தகைய பொறுப்பு முயற்சித் தொழிலைக் கொண்டு நடாத்தத் தொடங்கிய வரிமதிப்பீட்டாண்டின் தொடக்கத்திலிருந்து

அதாவது இதில் எது பிந்தியதோ அதிலிருந்து கணிப்பிடப்பட்ட பத்து ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.".

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்திற்காக ஏதேனும் கம்பனி தொடர்பிலும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பிலும்"குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சி" என்பது அக்கம்பனியால் கொண்டு நடாத்தப்படுவதும் –

(i) எவையேனும் பசுமை மாறாத அல்லது பதனிடப்பட்ட காய்கறிகளின் அல்லது பழங்களின் ஏற்றுமதியிலும்; அத்துடன்

(ii) அந்த வரிமதிப்பீட்டாண்டில், பரப்பளவில் ஐந்து ஏக்கர்களுக்குக் குறையாத காணியில் காய்கறிகளின் அல்லது பழங்களின் பயிர்ச்செய்கையில்

ஈடுபட்டுள்ளதுமான ஒரு பொறுப்பு முயற்சி என்று பொருள்படும்.

இப் பிரிவில் காய்கறிகள் என்பது, வெற்றிலையையும் உள்ளடக்கும்.".

12. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 24ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (i)ஆம் உட்பிரிலில் -

(அ) அவ்வுட்பிரிவின் (உஉஉ) என்னும் பந்தியில்-

(i) அதன் (i)ஆம் உட்பந்தியில் "(உட்பந்தி (ii)இல் குறிப்பீடு செய்யப்படும் பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி அல்லது பொருத்திகள் அல்லாதவையும்)" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "(உட்பந்திகள் (ii)இலும் அத்துடன் (iiஅ)விலும் குறிப்பீடு செய்யப்படும் பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி அல்லது பொருத்திகள் அல்லாதவையும்)" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்:

(ii) அப்பந்தியின் (ii)ஆம் உட்பந்தியில் "1987, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனம், வசுவண்டி, உழவு இயந்திரம், இழுவை வண்டி அல்லது அலுவலகத் தளபாடம் என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "1987, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனம், லொறி, வசுவண்டி, உழவு இயந்திரம், இழுவை வண்டி அல்லது அலுவலகத் தளபாடங்கள் (iiஅ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் மோட்டார் கோச்சு வண்டியைத் தவிர)" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம்.

(iii) அப்பந்தியின் (ii)ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்:-

"(iiஅ) 1998 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்டதும் அத்தகைய ஆளின் ஊழியர்களை அவர்களது வேலையிடத்துக்கு அல்லது அங்கிருந்து ஏற்றிச் செல்வதற்குப் பயன்படுத்தப்படுவதுமான ஏதேனும் மோட்டார் கோச்சு வாகனம் அது கொள்ளப்பட்ட செலவின் நூற்று வீதப்படி;"

(ஆ) அவ்வுட்பிரிவின் (ந) என்னும் பந்தியில் "அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகை; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

(இ) அவ்வுட்பிரிவின் (ந) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலம்:-

(ப) இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவால் உரிமமளிக்கப்பட்டதான ஏதேனும் பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையால் வெளியிடப்பட்ட ஏதேனும் அலுவலக முறையான நிரலில் அத்தகைய கம்பனியின் பங்குகளுக்கு 1999, மாச்சு 31ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் விலைகோரிப் பெறப்பட்டிருப்பின் அத்தகைய விலைகோரிப் பெறுவதில் 1997, நவெம்பர் 6ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1999, மாச்சு 31ஆந் தேதிக்கு முன்னர் உறப்பட்ட எவையேனும் செலவுகள்":"

(2) அவ்வுட்பிரிவின் (7)ஆம் உட்பிரிவில் -

(அ) பந்தி (இ) என்பதன் (ii)ஆம் உட்பந்தியில் "விற்பனையின் மூலமாக அல்லாது வேறுவகையில்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விற்பனையின் மூலமாக அல்லாது வேறு வகையில்,

விடயத்திற்கேற்ப அத்தகைய விற்பனை விலையில் அல்லது சந்தைப் பெறுமதியில், 1996ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, பண்டங்கள் மற்றும் சேவைகள் என்பன மீதான வரிச்சட்டத்தின் கீழ் அறவிடப்படற்பாலதான பண்டங்கள் மற்றும் சேவைகள் மீதான வரி உள்ளடக்கப்பட்டிருப்பின் அத்தகைய வரித்தொகையை, விடயத்திற்கேற்ப அத்தகைய விற்பனை விலையிலிருந்து அல்லது சந்தைப் பெறுமதியிலிருந்து கழிப்பனவு செய்த பின்னர்" என்றும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம்.

(அ) அவ்வட்டிப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் (iii)ஆம் உட்பந்தியில் "கொள்ளப்பட்ட தேதியாகக் கருதப்படுதல் வேண்டும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கொள்ளப்பட்ட தேதியாகக் கருதப்படுதல் வேண்டும்:" என்னும் சொற்களை இடுவதன் மூலம்;

(இ) அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் (iii)ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலம்:-

"(iv) ஆளெவரும் 1996ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க பண்டங்கள் மற்றும் சேவைகள் என்பன மீதான வரிச் சட்டத்தின்கீழ் ஏதேனும் முலதனச் சொத்தைக் கொள்ளுதல் அல்லது நிர்மாணித்தல் தொடர்பில் செலுத்தப்பட்ட உள்ளீட்டு வரிக்கான கடனுக்கு உரிமைகோரும் உரித்துடையவராயிருக்குமிடத்து, விடயத்திற்கேற்ப அத்தகைய முலதனச் சொத்தின் கொள்ளலுக்கு அல்லது நிர்மாணத்திற்கான செலவில் அத்தகைய உள்ளீட்டு வரி அடங்கமாட்டாது.".

13. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 24ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டிப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் (iii)ஆம் உட்பந்தியில் "விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் வரி அல்லது அறவீடு என்ற வகையாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் வரி அல்லது அறவீடு என்ற வகையாக; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

(2) அப்பந்தியின் (iii)ஆம் உட்பந்தியை உடனடுததுப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலம்:-

"(iv) இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அத்தகைய ஆளினால் கொண்டு நடாத்தப்படும் ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான செயற்பாடு தொடர்பில், அத்தகைய ஆள் இச்சட்டத்தின்கீழ் அத்தகைய உள்ளீட்டு வரிக்கான கடனுக்கு உரிமை கோருவதற்கு உரித்துடையவராயிருப்பின், இலாபங்களும் வருமானமும் எந்தக் காலப்பகுதிக்கு ஆய்ந்தறியப்படுகின்றனவோ அந்தக் காலப்பகுதிக்கு 1996ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க பண்டங்கள் மற்றும் சேவைகள் என்பன மீதான வரிச் சட்டத்தின் கீழான உள்ளீட்டு வரி.".

14. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 24ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 29ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ஆ)என்னும் பந்தியில்-

(அ) அப்பந்தியின் (ii) (அ) என்னும் இனத்தில் "(7அ) என்னும் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு நட்டம்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "(7அ) என்னும் உட்பிரிவில், (7ஆ) என்னும் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு நட்டம்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

(ஆ) பந்தி (ஆ)வின் காப்புவாசகத்தின் (iv)ஆம் இனத்தில் "(7அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களுக்கும் இலக்கத்துக்கும் பதிலாக, "(7அ) என்னும் பந்தியில் (7ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில், அவ்வட்டிப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "அத்தகைய மீதி முழுத் தொகை அல்லது அதன் பாகம்" என்னும் சொற்களிலிருந்து "(2)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் கொடுப்பனவு செய்யப்படுத்தல் வேண்டும்" என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும இலக்கங்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"அத்தகைய முழுத்தொகை அல்லது அதன் பாகம் உடனடுத்து வரும் வரிமதிபபீட்டாண்டிற்கான அவரது நியதிச்சட்டமுறையான மொத்த வருமானத்திலிருந்து மேலும் அவ்வாறே தொடர்ந்தும் கழிக்கப்படுதல் வேண்டும்;

ஆயினும் அத்தகைய முதலாவது வரிமதிப்பீட்டாண்டானது, -

(i) 1997, மார்ச 31ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னா முடிவடையும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்து, அத்தகைய நட்டம் உறப்பட்ட அத்தகைய வரிமதிப்பீட்டாண்டை அடுத்துறுகின்ற ஆனால் 1997, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்கும் மதிப்பீட்டாண்டிற்கு முன்னரான வரிமதிப்பீட்டாண்டுகள் ஒவ்வொன்றிற்கும் அத்தகைய ஆளின் மொத்த நியதிச்சட்ட வருமானத்திலிருந்து அத்தகைய முழுத்தொகை அல்லது அத்தகைய பாகம் கழிப்பனவு செய்யப்பட்ட பின்னர் அதன் மிச்சம் ஏதுமிருப்பின் 1998, மார்ச 31ஆம் தேதியன்று முடிவுறும் வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய பொறுப்பு முயற்சியில் அத்தகைய ஆளினால் உறப்பட்ட நட்டமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும், என்பதுடன் அதற்கிணங்க,

(ii) 1997, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், அவ்வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய ஆளின் மொத்த நியதிச் சட்ட வருமானத்திலிருந்து அத்தகைய முழுத் தொகை அல்லது அதன் ஏதேனும் பாகம் கழிப்பனவு செய்யப்பட்ட பின்னர் அதன் மிச்சம் ஏதுமிருப்பின் அது அவ்வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துறும் வரிமதிப்பீட்டாண்டில் அப்பொறுப்பு முயற்சியில் அத்தகைய ஆளினால் உறப்பட்ட நட்டமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க,

2ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் கழிப்பனவு செய்யப்படுதலும் வேண்டும்.":

(3) அப்பிரிவின் (7அ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியை உட்புகுத்துவதன்மூலம்:-

"(7ஆ) 1997, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஆளொருவரின் மொத்த நியதிச்சட்ட வருமானம், ஏதேனும் குத்தகை வியாபாரத்திலிருந்து இலாபங்களையும் வருமானத்தையும் உள்ளடக்கியிருக்குமிடத்து, அத்தகைய வருமானத்திலிருந்து, எந்தக் குத்தகை வியாபாரம் இலாபமொன்றாக இருந்திருப்பின் இச்சட்த்தின்கீழ் வரிவிதிக்கப்படற்பாலதாக இருந்திருக்கக்கூடியதும் அவரது முன்னைய ஆண்டொன்றின் மொத்த நியதிச்சட்ட வருமானத்திலிருந்து அவ்வாறு கழிப்பனவு செய்யப்பட்டிராததுமான அந்தக் குத்தகை வியாபாரத்திலிருந்து 1977, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான ஏதேனும் நட்டம் கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்: ஆயினும், அத்தகைய கழிப்பனவானது, எத விடயத்திலும் அத்தகைய மொத்த நியதிச்சட்ட வருமானத்தில் உள்ளடக்கப்பட்ட இலாபங்களினதும் வருமானத்தினதும் தொகையை விஞ்சுதலாகாது: அத்துடன் கூடுமானவரை, அத்தகைய கழிப்பனவு, முதலாவது வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய ஆளின் மொத்த நியதிச்சட்ட வருமானத்திலிருந்தும் அதன்பின்னர் நட்டம் உறப்பட்ட ஆண்டிலும் அத்துடன் அவ்வாறு செய்யமுடியாதிருக்கும்வரை, அடுத்தபடியாக அடுத்துறும் வரிமதிப்பீட்டாண்டின் மொத்த நியதிச்சட்ட வருமானத்திலிருந்தும் என்றவாறு கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30ஆம் பிரிவு அப்பிரிவின் (2)அம் உட்பிரிவிற்கான முன்றாவது காப்பு வாசகத்தில் "1989, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1989, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1997 மார்ச 31ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கும் அத்துடன் 1997, மார்ச 31முதல் 1997, திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதிக்கும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

16. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றாறாம் ஆண்டின் 16ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவின் (ட) என்னும் பந்தியில் "கழிக்கப்படற்பாலதாதல் அகாது." என்னும்

சொற்களுக்குப் பதிலாக, "கழிக்கப்படற்பாலதாதல் ஆகாது:" என்னும் சொற்களை இடுவதன்மூலம்.

(ஆ) அவ்வட்டிபிரிவின் (ட) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்திகளைச் சேர்ப்பதன் மூலம்:

"(ண) எந்தக் கம்பனியின் பங்குகள் 1999, மார்ச்சு 31ஆம்தேதியன்றுள்ளவாறு இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையால் வெளியிடப்பட்ட ஏதேனும் அலுவலக முறையான நிரலில் விலை கோரப்படுகின்றனவோ அந்த ஏதேனும் கம்பனியில் ஏதேனும் உளமாம் பங்கைத் தவிர வேறு ஏதேனும் சாதாரண பங்கின் கொள்வனவில் 1997, நவெம்பர் 6ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1998, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் எவரேனும் தனியாளினால் முதலீடு செய்யப்பட்ட ஏதேனும் பணத்தொகை;

(த) எவரேனும் ஆளினால் –

(அ) (i) 1997, நவெம்பர் 6ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் கூட்டிணைக்கப்பட்டதும்;

(ii) 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை தேசிய அரசுப் பேரவைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டுள்ளதும் அவ்வுடன்படிக்கைக்கிணங்க இலங்கையில் உள்ளகக் கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்கான ஏதேனும் பொறுப்பு முயற்சியில் ஈடுபட்டுள்ளதும்; அத்துடன்

(ஆ) (i) 2000, மார்ச்சு 31ஆம்தேதியன்றுள்ளவாறு முந்நூறு மில்லியன் ரூபாவுக்குக் குறையாது வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தையுடையதும்; அத்துடன்

(ii) 2000, மார்ச்சு 31ஆம் தேதியன்றுள்ளவாறு, கம்பனியால் கொண்டு நடாத்தப்படும், பொறுப்பு முயற்சியின் பாவனைக்கு –

(அ) ஏதேனும் கட்டிடத்தின் கொள்வனவில் அல்லது நிர்மாணத்தில் அல்லது ஏதேனும் காணியின், பொறியின், எந்திரத்தின் அல்லது தளபாடத்தின் கொள்வனவில்; அத்துடன்

(ஆ) பந்தி (அ) என்பதில் அடங்காத வேறு ஏதேனும் சொத்தின் கொள்ளலில் ஐந்நூறு மில்லியன் ரூபாவுக்குக் குறையாமல் முதலீடு செய்துள்ளதுமான

ஏதேனும் கம்பனியில் ஏதேனும் உளதாம் பங்கைத் தவிர வேறு ஏதேனும் சாதாரண பங்கின் கொள்வனவில் 1997, நவெம்பர் 6ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னா ஆனால் 2000, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் முதலீடு செய்யப்பட்ட ஏதேனும் பணத்தொகை;

(ந) 1998, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் எவரேனும் ஆளினால்–

(i) பிரிவு 11(அஅஅஅ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கம்பனியில்; அல்லது

(ii) 17க என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கம்பனியில் முதலீடு செய்யப்பட்ட பணத்தொகை பத்து மில்லியன் ரூபாவுக்குக் குறையாததாயிருக்கின்றதெனவும் அத்தடன், அத்தகைய தொகை அப்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியில் பயன்படுத்தப்பட்டதெனவும் மதிப்பீட்டாளரின் திருப்திக்கேற்ப எண்பிக்கப்படுமிடத்து.

அத்தகைய ஏதேனும் கம்பெனியில், ஏதேனும் உளதாம் பங்கைத் தவிர வேறு ஏதேனும் சாதாரண பங்கின் கொள்வனவில் முதலீடு செய்யப்பட்ட ஏதேனும் பணத்தொகை.";

(2) அப்பிரிவின் (5உ) என்னும் உட்பிரிவில் -

(i) (அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (1)ஆம் உட்பந்தியில் "(2)ஆம் உட்பிரிவில் (ஆ), (இ), (க), (ங), (ட) என்னும் பந்திகளில்" என்னும் சொற்களுக்கும் எழுத்துக்களுக்கும் பதிலாக, "(2)ஆம் உட்பிரிவின் (ஆ), (இ), (க), (ங), (ட), (ண), (த) அத்துடன் (ந) என்னும் பந்திகளில்" என்னும் சொற்களையும் எழுத்துக்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) உட்பந்தி (iii) என்பதில் "விஞ்சுதலாகாது: அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விஞ்சுதலாகாது:" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) அவ்வுட்பிரிவின் (iii)ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்திகளை இடுவதன் மூலமும்:-

"(iiiஅ) அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட (2)ஆம் உட்பிரிவின் (ண) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லா தகைமைபெறும் கொடுப்பனவுகள் தொடர்பிலும் அத்தகைய வரிமதிப்பிடற்பாலதான வருமானத்தின் மூன்றிலொன்றை விஞ்சுதலாகாது;

"(iiiஆ) அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட (2)ஆம் உட்பந்தியின் (த) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லாத் தகைமைபெறும் கொடுப்பனவுகள் தொடர்பிலும்: அத்துடன்";

(ii)"(ஆ)பந்தி (ஆ)வில் "(ஆ), (இ), (க), (ங) என்னும் பந்திகளில்" என்னும் சொற்களுக்கும் எழுத்துக்களுக்கும் பதிலாக, "(ஆ), (இ), (க), (ங), (ந) என்னும் பந்திகளில்" என்னும் சொற்களையும் எழுத்துக்களையும் இடுவதன் மூலமும்";

(3) அப்பிரிவின் (6)ஆம் உட்பிரிவில்-

(அ) அவ்வுட்பிரிவின் (i)ஆம் உட்பிரிவில் "செலுத்தப்பட்டதாகக் கருதப்பட்டதுமான அல்லது" ஏன்னும் சொற்களுக்குப் பதிலாக, "செலுத்தப்பட்டதாகக் கருதப்பட்டதுமான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் -

(ஆ) அவ்வுட்பிரிவின் (ii)ஆம் உட்பிரிவில் "உட்பிரிவு (2)இன் (ட) என்னும் பந்தியில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "உட்பிரிவு (2)இன் (ட) அல்லது (த) என்னும் பந்தியில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(4) அப்பிரிவின் (7அ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(7அஅ) ஏதேனும் கம்பனியில் ஏதேனும் பங்கின் கொள்வனவு தொடர்பில் (1)ஆம் உட்பிரிவின்கீழ் அவரது வரிமதிப்பிடற்பாலதான வருமானத்திலிருந்து விடுதொகையொன்றின் கழிப்பனவொன்றுக்கு உரித்துடையவரான ஆளெவரும் அத்தகைய பங்கை விற்குமிடத்து அல்லது அத்தகைய பங்கு தொடர்பில் ஏதேனும் பணத்தை மீளப் பெறுமிடத்து, பணமாக மாற்றிப் பெறுமிடத்து அல்லது பெற்றுக்கொள்ளுமிடத்தும் அத்துடன் வேறு எந்தச் சாதாரண பங்குகள் தொடர்பில் அவ்வுட்பிரிவின்கீழ் அவரது வரிமதிப்பிடற்பாலதான வருமானத்திலிருந்து கழிப்பனவொன்றுக்கு உரித்துடையவராகின்றாரோ அந்த வேறு சாதாரண பங்குகளைக் கொள்வனவு செய்யுமிடத்தும் அவர், இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட பங்குகளின் கொள்வனவு தொடர்பில் வருமான வரியிலிருந்து எந்தக் கழிப்பனவுக்கு உரித்துடையவராகின்றாரோ அந்தக் கழிப்பனவு, அவர் முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட பங்குகளின் கொள்வனவு தொடர்பில் வருமான வரியிலிருந்து எந்தக் கழிப்பனவுக்கு உரித்துடையவராக இருந்தாரோ அந்தக் கழிப்பனவின் தொகையால் குறைக்கப்படுதல் வேண்டும்.".

17. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 24ஆம் இலக்கச் சட்டத்தால் உட்புகுத்தப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் 31அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i)ஆம் உட்பந்திக்குப் பதிலாக பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்:-

"(i) 1996, நவெம்பர் 6ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால், 2000, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர்;"

(2) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில், "முதலீட்டின் முழுத்தொகை ஆகிய இவற்றுள் எது குறைந்ததோ அதுவாக இருத்தல் வேண்டும்." என்னும் சொற்கள் அவ்வுட்பிரிவில் எங்கெங்கு காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் அவற்றிற்குப் பதிலாக, "அத்தகைய முதலீட்டு வரிவிடுதொகையின் முழுத்தொகை ஆகிய இவற்றுள் எது குறைந்ததோ அதுவாக இருத்தல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (6)ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ii)ஆம் பந்தியில் "1996, நவெம்பர் 6ஆம் தேதி தொடங்கி 1999, மாச்சு 31ஆம் தேதியன்று முடிவடையும் காலப்பகுதியின்போது" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக,

"(அ) அத்தகைய சொத்து 1998, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன் கொள்ளப்பட்டிருக்குமிடத்து அல்லது கொள்ளப்பட்டதாகக் கருதப்படுமிடத்து, 1996 நவெம்பர் 6ஆம் தேதி தொடங்கி 1999, மாச்சு 31ஆம் தேதியன்று முடிவடையும் காலப்பகுதியின்போது; அல்லது

(ஆ) அத்தகைய சொத்து 1998, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் கொள்ளப்பட்டுள்ளவிடத்து, அல்லது கொள்ளப்பட்டதாகக் கருதப்படுமிடத்து 1998, ஏப்பிறல் 1ஆம் தேதி தொடங்கி 2000, மாச்சு 31ஆம் தேதியன்று முடிவடையும் காலப் பகுதியின்போது" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

18. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 16ஆம் இலக்கச் சட்டத்தால் உட்புகுத்தப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் 32இஇஇ என்னும் பிரிவு அப்பிரிவின் இறுதியில் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(3) பதினோராம் பிரிவின் (7)ஆம் உட்பிரிவின் (அஅஅஅஅ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பனியொன்றில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளவரும் 67ஆம் பிரிவின் (7)ஆம் உட்பிரிவின்கீழ் ஐந்து ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு வதிவற்றவராகக் கருதப்படுகின்றவருமான தனியாளொருவர் ஐந்து ஆண்டுகளைக் கொண்ட அத்தகைய காலப்பகுதிவு முடிவுற்ற பின்னரும் அத்தகைய கம்பனியல் தொடர்ந்து தொழிலிலிருக்குமிடத்து, ஐந்தாண்டுகளைக் கொண்ட அத்தகைய காலப்பகுதியின் இறுதியிற் தொடங்கி அத்தகைய கம்பனியால் செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட காலப்பகுதியின் கடைசி நாளன்று முடிவடையும் காலப்பகுதிக்கு அக்கம்பனியிலான தொழிலிலிருந்து அத்தகைய தனியாளின் இலாபங்கள், இச்சட்டத்தின் (viii)ஆம் அத்தியாயத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், பதினைந்து சதவீதப்படி வருமானவரி விதிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.".

19. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தொன்பதாம் ஆண்டின் 11ஆம் இலக்கச் சட்டத்தால் உட்புகுத்தப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் 32ஈ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் "இலங்கை மத்திய வங்கியால் வைத்திருக்கப்படும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "1998 சனவரி 1ஆம் தேதிக்கு முன்னர் இலங்கை மத்திய வங்கியால் வைத்திருக்கப்படும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32ஈஈ என்னும் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவுகள் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை முறையே முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவுகள் 32ஈஈஈ, 32ஈஈஈஈ, 32ஈஈஈஈஈ என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும்:-

"கம்பனியொன்றல்லாத வேறு ஆளொருவரால் கொண்டு நடாத்தப்படும் குறித்த சில பொறுப்பு முயற்சிகளிலிருந்து வரும் இலாபங்கள் மீது வருமான வரி வீதம்.

32ஈஈஈ (1) ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றெட்டாம் ஆண்டு ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு (கம்பனியொன்றல்லாத வேறு) எவரேனும் ஆளின் வரி விதிக்கப்படற்பாலதான வருமானத்தில், ஏதேனும் விவசாயப் பொறுப்பு முயற்சியிலிருந்து அல்லது உல்லாசப் பிரயாணத்துறையை ஊக்குவிப்பதற்கான ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்து வரும் எவையேனும் இலாபங்களும் வருமானமும் (இப்பிரிவில் இதனகத்துப் பின்னர் "குறித்துரைக்கப்பட்ட இலாபங்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அடங்குமிடத்தும், அத்துடன் அத்தகைய வருமானத்தின் பாகமொன்றின்மீது (இப்பிரிவில் இதனகத்துப்பின்னர் "வருமானத்தின இயையான பாகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) செலுத்தப்படற்பாலதான வருமான வரிவீதம் பதினைந்து சதவீதத்தை விஞ்சுகின்றவிடத்தும், அப்போது வருமானத்தின் இயையான பாகம் தொடர்பில் வரியானது பின்வருமாறு கணிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) வருமானத்தின் இயையான பகுதி, அத்தகைய குறித்துரைக்கப்பட்ட இலாபங்களின் தொகையை விஞ்சினால் -

(i) அத்தகைய குறித்துரைக்கப்பட்ட இலாபங்களின் தொகைக்குச் சமனான வருமானத்தின் இயையான பாகத்தின் அத்தகைய பகுதிமீது செலுத்தப்படற்பாலதான வரியானது, பதனைந்து சதவீதம் என்ற வீதத்தில் இருத்தல் வேண்டும்; அத்துடன்

(ii) வருமானத்தில் இயையான பாகத்தின்மீது செலுத்தப்படற்பாலதான வரியானது, இச் சட்டத்தின்கீழ் அதற்கு ஏற்புடைத்தானவாறாகப் பதினைந்து சதவீதத்துக்கு மேலுள்ள வரிவீதங்களுக்கிணங்க கணிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) அத்தகைய குறித்துரைக்கப்பட்ட இலாபங்களின் தொகையை, வருமானத்தின் இயையான பாகம் விஞ்சாவிட்டால், வருமானத்தின் முழு இயையான பாகத்தின்மீதும் செலுத்தப்படற்பாலதான வரியானது, இவ்வத்தியாயத்தின் அல்லது (viiiஅ) என்னும் அத்தியாயத்தின் வேறு ஏற்பாடுகளுக்கு முரணாக எது எப்படியிருப்பினும், பதினைந்து சதவீதம் என்ற வீதத்தில் இருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்கா -

(அ) "கமத்தொழில் பொறுப்புமுயற்சி" என்பது -

(i) கடற்றொழில்;

(ii) எத்தன்மத்தான விவரணத்தைக் கொண்டனவுமான தாவரங்களைப் பயிரிடும் காணி; அத்துடன்

(iii) எத்தன்மைத்தான விவரணத்தைக் கொண்டனவுமான தாவரங்களைப் பயிரிடுவதற்கான காணிக்கான ஏதேனும் பொறுப்பு முயற்சிக்கான முகாமைச் சேவைகளை வழங்குதல்,

ஆகியவற்றுக்கான பொறுப்பு முயற்சி எதனையும் உள்ளடக்கும்;

(ஆ) "உல்லாசப் பிரயாணத்தை மேம்படுத்துவதற்கான ஏதேனும் பொறுப்புமுயற்சி" என்பது -

(i) இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஓட்டலை அல்லது விருந்தினர் மனையை; அல்லது

(ii) "வகுப்பு அ" அல்லது "வகுப்பு ஆ"வில் இருப்பதாக இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையினால் தரம் வழங்கப்பட்ட உணவுச்சாலையை;

(iii) பிரயாண முகவர் ஒருவரின் ஏதேனும் தொழிலை;

(iv) உல்லாசப் பிரயாணிகளைக் கொண்டு செல்லும் ஏதேனும் தொழிலை;

(v) பொழுதுபோக்குக்கு அல்லது விளையாட்டுக்களுக்கு வசதிகள் வழங்குவதற்காக இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனம் தொழிலை.

நடாத்துவதற்கான பொறுப்புமுயற்சி ஒன்றெனப் பொருள்படும்;

(இ) "ஏதேனும் கமத்தொழில் பொறுப்பு முயற்சியில் கிடைக்கும் இலாபங்களும் வருமானமும்" என்பது –

(i) பந்தித (அ)வின் (iii)ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பொறுப்பு முயற்சியொன்றின் விடயத்தில், முகாமைச் சேவைகளை வழங்குவதற்கான கட்டணங்களில் இருந்து கிடைக்கும் இலாபங்கள் மற்றும் வருமானம், அத்துடன்

(ii) ஏதேனும் வேறுவிடயத்தில் அத்தகைய பொறுப்பு முயற்சியின் விளைபொருளை ஏதேனும் உற்பத்திச் செயல்முறைக்கு அல்லது தயாரிப்புக்கு உட்படுத்தாமல் அத்தகைய விளைபொருளின் விற்பனையில் இருந்து கிடைக்கும் இலாபங்களும், வருமானங்களும்,

எனப் பொருள்படும்:

கம்பனி ஒன்றினால் கொண்டு நடாத்தப் படும் குறித்தசில பொறுப்பு முயற்சிக ளிலிருந்து கிடைக்கும் இலாபங்கள் மீதான வருமானவரி வீதம்

ஆயின், ஆளெவரும், உற்பத்திக்கான செய்முறைக்கு அல்லது தயாரிப்புக்கு அத்தைகய கமத்தொழில் பொறுப்புமுயற்சியின் விளைபொருளை உட்படுத்துவதற்காக ஏதேனும் பொறுப்பு முயற்சியைக் கொண்டுநடாத்துகின்றவிடத்து, கமத்தொழில் பொறுப்பு முயற்சியின் விளை பொருளானது, (இ) என்னும் பந்தியின் (ii)ஆம் உட்பந்தியின் நோக்கத்துக்காக, விற்பனை செய்யப்பட்டதாகக் கருதப்படும் நேரத்தில் நிலவிய திறந்த சந்தை விலையில் விற்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கமத்தொழில் பொறுப்பு முயற்சியின் உற்பத்தியின் விற்பனையிலிருந்து பெறும் இலாபம், அத்தகைய கருதப்பட்ட விற்பனையிலிருந்து வரும் இலாபமுமாகும்.

32ஈஈஈஈ. (1) ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றெட்டாம் ஆண்டு ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஏதேனும் கம்பனியின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம், ஏதேனும் கமத்தொழில் பொறுப்பு முயற்சியிலிருந்து அல்லது உல்லாசப் பிரயாணத்தை மேம்படுத்துவதற்கான ஏதேனும் பொறுப்புமுயற்சியில் இருந்து கிடைக்கும் இலாபங்கள் மற்றும் வருமானம் எவற்றையும் உள்ளடக்குகின்றவிடத்து, அத்தகைய இலாபங்களையும் வருமானத்தையும் கொண்டிருக்கக் கூடியவாறான, அத்தைகய வரிவிதிக்கப்படற்பாலதான அத்தகைய வருமானத்தின் அத்தகைய பாகமானது, இவ்வத்தியாயத்தின் அல்லது VIIIA என்னும் அத்தியாயத்தின் அல்லது IX என்னும் அத்தியாயத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், பதினைந்து சதவீதம் என்ற வீதத்தில் வருமானவரி விதிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, "கமத்தொழில் பொறுப்புமுயற்சி", "உல்லாசப் பிரயாணத்தை மேம்படுத்துவதற்கான ஏதேனும் பொறுப்புமுயற்சி" அத்துடன் "ஏதேனும் கமத்தொழில் பொறுப்பு முயற்சியில் இருந்து கிடைக்கும் இலாபங்கள் மற்றும் வருமானம்" என்னும் சொல்லமைப்புகள், *32ஈஈஈ* என்னும் பிரிவில் அவ்வவற்றிற்கு ஒதுக்கப்பட்ட அப்பொருள்களைக் கொண்டிருத்தல் வேண்டும்..

32ஈஈஈஈஈ என்னும் பிரிவுக்கி ணங்க, வரி விதிக்கப்பட்ட இலாபங்களி லிருந்து செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள் மீதான வருமான வரி வீதம்.

32ஈஈஈஈஈ. (1) ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு (கம்பனி ஒன்று தவிர்ந்த) ஆளெவரினதும் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் –

(அ) *32ஈஈஈஈ* என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள இலாபங்கள் மற்றும் வருமானம் ஆகியவற்றில் இருந்து கிடைத்த பங்கிலாபம் ஒன்றாக இருக்கின்ற பங்கிலாபம் எதனையும் உள்ளடக்குகின்றவிடத்து; அல்லது

(ஆ) ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட இடைநிலைக் கம்பனிகள் ஊடாக *32ஈஈஈஈ* ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கம்பனி ஒன்றிலிருந்து நேரடியாகக் கம்பனி எதனாலும் பெறப்பட்டதும், (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறானதுமான அத்தகைய ஏதேனும் பங்கிலாபத்திலிருந்து கிடைக்கும் பங்கிலாபம் ஒன்றாக இருக்கும் பங்கிலாபம் எதனையும் உள்ளடக்குகின்ற விடத்து, முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட பங்கிலாபமானது, எவ்வரிமதிப்பீடாண்டின்போது *32ஈஈஈஈ* என்னும் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள இலாபங்களும் வருமானமும் எழுந்தனவோ அல்லது வந்து சேர்ந்தனவோ, அவ்வாண்டின்போது அல்லது அவ்வரிமதிப்பீட்டாண்டின் முடிவில் இருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் செலுத்தப்பட்டிருந்தால், அத்துடன் (இதனகத்துப்பின்னர் இப்பிரிவில், வருமானத்தின் இயைபான பாகம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய வருமானத்தின் பாகம் ஒன்றின்மீது

செலுத்தப்படற்பாலதான வருமானவரி வீதமானது, பதினைந்து சதவீதத்தை விஞ்சுமானால், வருமானத்தின் இயைபான பாகம் தொடர்பில், வரியானது, பின்வருமாறு கணிக்கப்படுதல் வேண்டும்:–

(i) வருமானத்தின் இயைபான பாகம், அத்தகைய பங்கிலாபங்களின் தொகையை விஞ்சினால்–

அத்தகைய பங்கிலாபங்களின் தொகைக்குச் சமனானவாறான வருமானத்தின் இயைபான பாகத்தின் அத்தகைய பாகத்தின்மீது செலுத்தப்படற்பாலதான வரியானது, பதினைந்து சதவீதத்தில் இருத்தல் வேண்டும்; அத்துடன்

வருமானத்தின் இயைபான பாகத்தின் மீதியின்மீது செலுத்தப்படற்பாலதான வரியானது, இச்சட்டத்தின்கீழ் அதற்கு ஏற்புடைத்தானவாறாக, வரியின் அத்தகைய வீதங்களுக்கிணங்க பதினைந்து சதவீதத்துக்குமேல் கணிக்கப்படுதல் வேண்டும்.

(ii) வருமானத்தின் இயைபான பாகம், வருமானத்தின் முழுமையான இயைபான பாகத்தின்மீது செலுத்தப்படற்பாலதான அத்தகைய பங்கிலாபத் தொகையை விஞ்சாவிட்டால் வருமானமானது, இவ்வத்தியாயத்தின் அல்லது (viiiஅ) என்னும் அத்தியாயத்தின் வேறு ஏற்பாடுகளில் முரணாக எது எப்படியிருப்பினும், பதினைந்து சதவீதத்தில் இருத்தல் வேண்டும்.

(2) ஏதேனும் கம்பனியின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம், (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் பங்கிலாபத்தை உள்ளடக்குகின்றவிடத்து, அத்தகைய பங்கிலாபத்தைக் கொண்டுள்ளவாறான அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அத்தகைய பாகத்துக்கு ஏற்புடைத்தான வருமானவரியின் வீதமானது, 35ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, பதினைந்து சதவீதமாக இருத்தல் வேண்டும்.

21. பின்வரும் புதிய பிரிவுகள் 32உஉஉ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை, முறையே, முதன்மைச் சட்டவாக்கத்தின் 32உஉஉஉ மற்றும் 32உஉஉஉஉ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:–

"குறித்த சில நிபந்தனைகளின்கீழ் ஏதேனும் விலை கோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பெனியினால் செலுத்தப்படற்பாலதான வரியிலிருந்து கழித்தல்.

32உஉஉஉ. (1) ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றெட்டாம் ஆண்டு ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு (2)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் கம்பனியின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம், 3(அ) என்னும் பிரிவின் கருத்தெல்லைக்குள் வரும் எவையேனும் இலாபங்களையும் வருமானத்தையும் உள்ளடக்குகின்றவிடத்து, அவ்வரிமதிப்பீட்டாண்டிற்கு அக்கம்பனியினால் செலுத்தப்படற்பாலதான வரியிலிருந்து, அத்தகைய இலாபங்களையும், வருமானத்தையும் கொண்டுள்ளவாறான அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அத்தகைய பாகத்தின் ஐந்து வீதத்திற்குச் சமமான தொகையொன்று கழிக்கப்படுதல் வேண்டும்;

ஆயின், அவ்வாறு கழிக்கப்படற்பாலதான தொகையானது, அவ்வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய கம்பனியினால் செலுத்தப்படற்பாலதான அத்தகைய வரியை விஞ்சுகின்றவிடத்து, விஞ்சுதொகையானது மீளளிக்கப்படுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள், (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில் –

(அ) அவ்வரிமதிப்பீட்டாண்டுக்கு, விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியொன்றாக இருக்கின்ற கம்பனி எதற்கும்; அத்துடன்

(ஆ) எக்கம்பனி தொடர்பில் அத்தகைய கம்பனியின் பங்கு இடாப்பில் பங்குதாரர்களாக, அவ்வரிமதிப்பீட்டாண்டின் போது பதிவுசெய்யப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை எந்நேரத்திலும் 300 பேர்களுக்குக் குறைவாக இல்லையென வரிமதிப்பீட்டாளர் திருப்திப்படும் அக் கம்பனி எதற்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(3)(அ) 1997ஆம் ஆண்டு ஏப்பிறல் 1ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டுக்கு, விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியொன்றாக இருக்கின்ற ஏதேனும் கம்பனி தொடர்பில்: அத்துடன்

(ஆ) எக்கம்பனி தொடர்பில், 1998ஆம் ஆண்டு மாச்சு 31ஆம் தேதியன்று உள்ளவாறாக அத்தகைய கம்பனியின் பங்கு இடாப்பில் பங்குதாரர்களாகப் பதிவுசெய்யப்பட்டிருக்கும் ஆட்களின் எண்ணிக்கை 300 பேர்களுக்குக் குறையாமல் இருக்கின்றதென: அத்துடன் வரிமதிப்பீட்டாளர் திருப்திப்படுகின்றவிடத்து, (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கழிப்பானது, 1997, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டுக்கு அக்கம்பெனிக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

பங்குகளின் விலை கோரலைப் பெற்று, குறித்த சில நிபந்தனைகளைத் திருப்திப்படுத்தும் ஏதேனும் கம்பெனியினால் செலுத்தப்படற்பாலதான வரியிலிருந்தான கழித்தல்.

32உஉஉஉஉ. (1) ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றெட்டாம் ஆண்டு ஏப்பிறல் 1ஆம் தேதியன்று தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு, (2)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் கம்பெனியின் வரி விதிக்கப்படற்பாலதான வருமானம், 3(அ)ஆம் பிரிவின் கருத்தெல்லைக்குள் வரும் எவையேனும் இலாபங்களையும் வருமானத்தையும் உள்ளடக்குகின்றவிடத்து, அவ்வரிமதிப்பீட்டாண்டுக்கு அக்கம்பெனியினால் செலுத்தப்படற்பாலதான வரியிலிருந்து, அத்தகைய இலாபங்களையும் வருமானத்தையும் கொண்ணுடுள்ளவாறான அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அத்தகைய பாகத்தின் ஐந்து வீதத்துக்குச் சமனான ஒரு தொகை கழிக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், அவ்வாறு கழிக்கப்படற்பாலதான தொகை, அவ்வரிமதிப்பீட்டாண்டுக்கு அத்தகைய கம்பெனியினால் செலுத்தப்படற்பாலதான வரியை விஞ்சுகின்றவிடத்து, விஞ்சுதொகை மீள் அளிக்கப்படுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில், (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் –

(அ) எக்கம்பெனியின் பங்குகள், அவ்வரிமதிப்பீட்டாண்டின் மாச்சு 31ஆம் தேதியன்று உள்ளவாறாக, அவ்வரிமதிப்பீட்டாண்டில் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் விளைவாக, இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் பங்கு வியாபாரிகள் சந்தையினால் வெளியிடப்பட்ட ஏதேனும் உத்தியோகபூர்வ நிரலில் விலைகோரப்பட்டுள்ளதோ, அக்கம்பெனிக்கு; அத்துடன்

(ஆ) எக்கம்பெனி தொடர்பில், அவ்வரிமதிப்பீட்டாண்டின் மாச்சு 31ஆம்தேதியன்று உள்ள வாறாக அத்தகைய கம்பெனியின் பங்கு இடாப்பில் பங்குதாரர்களாகப் பதிவுசெய்யப்பட்டிருக்கும் ஆட்களின் எண்ணிக்கை முந்நூறு பேர்களுக்குக் குறைவாக இல்லாதிருக்கின்றதென வரிமதிப்பீட்டாளர் திருப்திறும் அக்கம்பெனி எதற்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

இவ்உட்பிரிவில், (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள "கொளிக் கம்பெனி" மற்றும் "துணைநிலைக் கம்பெனி" என்னும் சொல்லமைப்புக்கள், 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 150ஆம் பிரிவில் அவற்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அவ்வப்பொருள்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஏதேனும் கம்பெனி தொடர்பில் –

(அ) எக்கம்பெனியின் பங்குகள், 1998 மாச்சு 31ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அதற்கெனச் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் விளைவாக, இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமம் வழங்கப்பட்ட ஏதேனும் பங்குவியாபாரிகள் சந்தையினால் வெளியிடப்பட்ட ஏதேனம் உத்தியோகபூர்வ பட்டியலில் 1999 மாச்சு 31ஆம் தேதியன்று உள்ளவாறாக, விலை கோரப்பட்டனவாக இருக்கின்றவிடத்து, அத்துடன்

(ஆ) 1998 மாச்சு 31ஆம் தேதியன்று உள்ளவாறாக எக்கம்பெனியின் –

பங்கு இடாப்பில் பங்குதாரர்களாக பதிவுசெய்யப்பட்டிருக்கும் ஆட்களின் எண்ணிக்கை முந்நூறு பேர்களுக்குக் குறைவாக இல்லாதிருக்கின்றதென வரி மதிப்பீட்டாளர் திருப்தியுறும் அக்கம்பனி எதற்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

22. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றாறாம் ஆண்டின் 24ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப் பட்டவாறாக முதன்மைச் சட்டவாக்கத்தின் 33இ என்னும் பிரிவு, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ii) ஆம் பந்தியில் "பிரிவு 32ஊ அல்லது 32ஏ" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "பிரிவு 32ஈஈஈ அல்லது பிரிவு 32ஊ அல்லது பிரிவு ஏ" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

23. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றாறாம் ஆண்டின் 16ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப் பட்டவாறாக முதன்மைச் சட்டவாக்கத்தின் 33இ என்னும் பிரிவு, இத்தால் பின்வரமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் பந்தியின் (இ) என்னும் உட்பந்தியில் -

(அ) அவ்வுட்பந்தியின் (i) என்னும் விடயத்தை உடனடுத்துப்பின்னர் பின்வரும் விடயத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(iஅ) எப்பங்கிலாபங்கள் தொடர்பில் 54 சதவீதத்தில் முற்பணக் கம்பெனி வரி செலுத்தப்பட்டிருக்கிறதோ அப்பங்கிலாபங்கள்; அத்துடன்

(ஆ) அவ்வுட்பந்தியின் (ivஅ) மற்றும் (ivஆ) என்னும் விடயங்களை நீக்கிவிட்டு, அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் விடயங்களை இடுவதன் மூலமும்:-

(v) எப்பங்கிலாபங்கள் தொடர்பில் பதினேழு சதவீதத்தில் முற்பணக் பம்பெனி வரி செலுத்தப்பட்டிருக்கிறதோ, அப்பங்கலாபங்கள்;

(vi) எப்பங்கிலாபங்கள் தொடர்பில் பதினொரு சதவீதத்தில் முற்பணக் கம்பெனி வரி செலுத்தப்பட்டிருக்கிறதோ, அப்பங்கலாபங்கள்;

(vii) எப்பங்கிலாபங்கள் தொடர்பில் எட்டு சதவீதத்தில் முற்பணக் கம்பெனி வரி செலுத்தப்பட்டிருக்கிறதோ, அப்பங்கலாபங்கள்; அத்துடன்

(viii) எப்பங்கிலாபங்கள் தொடர்பில் ஐந்து சதவீதத்தில் முற்பணக் கம்பெனி வரி செலுத்தப்பட்டிருக்கிறதோ, அப்பங்கலாபங்கள்:";

(2) அப்பிரிவின் (2)ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியில், அவ்வுட்பந்தியின் (iii)ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்ர், பின்வரும் விடயத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(iiiஅ) 32 ஈஈஈஈ ஆம் பிரிவின் கீழ்"

24. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றாறாம் ஆண்டின் 16ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறாக முதன்மைச் சட்டவாக்கத்தின் 38ஆம் பிரிவு, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பந்தியின் (i) என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்னர் பின்வரும் விடயத்தை உட்புகுத்துவதன்மூலம்:-

"(iஅ) எப்பங்கிலாபங்கள் தொடர்பில் 54 சதவீதத்தில் முற்பணக் கம்பெனி வரி செலுத்தப்பட்டிருக்கிறதோ அப்பங்கிலாபங்கள்:";

(2) அவ்வுட்பந்தியின் (ivஅ) மற்றும் (ivஆ) என்னும் விடயங்களை நீக்கிவிட்டு, அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவனவற்றை இடுவதன் மூலமும்:

(ivஅ) பெறப்பட்டனவான எப்பங்கிலாபங்கள் தொடர்பில் பதினேழு சதவீதத்தில் முற்பணக் கம்பெனி வரி செலுத்தப்பட்டிருக்கிறதோ, அப்பங்கிலாபங்கள்;

(ivஆ) பெறப்பட்டனவான எப்பங்கிலாபங்கள் தொடர்பில் 11 சதவீதத்தில் முற்பணக் கம்பெனி வரி செலுத்தப்பட்டிருக்கிறதோ, அப்பங்கிலாபங்கள்;

(ivஇ) பெறப்பட்டனவான எப்பங்கிலாபங்கள் தொடர்பில் 8 சதவீதத்தில் முற்பணக் கம்பெனி வரி செலுத்தப்பட்டிருக்கிறதோ, அப்பங்கிலாபங்கள்;

(iv#) பெறப்பட்டனவான எப்பங்கிலாபங்கள் **தொடர்பில் 5 சதவீதத்தில் முற்பணக் கம்பெனி வரி** செலுத்தப்பட்டிருக்கிறதோ, அப்பங்கி**லாபங்கள்:"**;

25. முதனமைச் சட்டவாக்கத்தின் 92ஆம் பிரிவு, **அதன் முடிவில் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன்** மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

"(9) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "ஆவ**ணம்" என்னும் சொல்லமைப்பானது, ஏதேனும் கணனி** நிகழ்ச்சித் திட்டம் அல்லது தரவுகள், **தொகுக்கப்பட்ட வடிவத்தில் அல்லது எலெக்ட்ரொனிக்** அல்லது காந்தசக்தி அல்லது வேறு **மூலத்தில் களஞ்சியப்படுத்தப்படடிருக்கும் அல்லது** பதிவு செய்யப்பட்டிருக்கும் ஏதேனும் **டிஸ்கெற்றை, நாடாவை, கொம்பாக்ற் டிஸ்கை அல்லது** வேறு ஏதேனும் பொருளை உள்ளடக்**கும்.".**

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 108ஆம் பிரிவு, அப்**பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் "தொழில் தருநரைத்** தேவைப்படுத்துதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் **பதிலாகப் பின்வருவதை இடுவதன் மூலம் இத்தால்** திருத்தப்படுகின்றது:-

"தொழில்தருநரைத் தேவைப்படுத்துதல் **வேண்டும்: ஆயின், ஏதேனும் மோசடி, தவிர்ப்பு அல்லது** வேண்டுமென்றே தவறுகை புரிதல், ஏதேனும் **வரிமதிப்பீட்டாண்டில் எவரேனும் தொழில்தருநரினால்** கழிக்கப்படற்பாலதான ஏதேனும் வருமானவரி **தொடர்பில், அத்தகைய தொழில் தருநரினால் அல்லது** எவரேனும் தொழிலதருநர் சார்பில் **புரியப்பட்டிருக்கிறதென, வரிமதிப்பீட்டாளர்** அபிப்பிராயப்படுகின்றவிடத்து, அத்தகைய **தொழில்தருநர் மீது, அவ்வரிமதிப்பீட்டாண்டு முடிவுற்ற** பின்னர் எந்நேரத்திலும் மதிப்பீடொன்றைச் **செய்வது அல்லது மேலதிக மதிப்பீடொன்றைச் செய்வது,** வரிமதிப்பீட்டாளருக்குச் சட்டமுறையானதா**தல் வேண்டும்.".**

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 113ஊ என்னும் பிரிவு, **"அத்தகைய வரிமதிப்பீட்டாண்டிற்காக அத்தகைய** வங்கி அல்லது நிதி நிறுவனம் கழித்து ஆணையாளர் - தலைமையதிபதிக்குக் கொடுத்திருக்கவேண்டிய வருமானவரித் தொகையை அல்லது மேலதிக வருமானவரித் தொகையை" **என்னும் சொறுகளிலிருந்து அப்பிரிவின் முடிவுவரை** உள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவனவ**ற்றை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-**

"அத்தகைய வரிமதிப்பீட்டாண்டிற்காக, **வரிமதிப்பீட்டாளரின் அபிப்பிராயப்படி, அத்தகைய வங்கி** அல்லது நிதி நிறுவனம் கழித்து, ஆணையாளர் - **தலைமையதிபதிக்குக் கொடுத்திருக்க வேண்டிய** வருமானவரித் தொகையை அல்லது **மேலதிக வருமானவரித் தொகையை மதிப்பீடு** செய்யலாமென்பதுடன், அத்தகைய பணத்தொ**கையையும் அத்துடன் சேர்த்து 113ஏ என்னும் பிரிவின்கீழ்** கொடுக்குமதியாக இருக்கக்கூடியவாறான அத்தகைய **பணத்தொகையையும் உடனடியாகக் கொடுக்கும்படி** எழுத்துமூலமான அறிவித்தலினால் **அத்தகைய வங்கியை அல்லது நிதி நிறுவனத்தைத்** தேவைப்படுத்துதலும் வேண்டும்:

ஆயின் ஏதேனும் மோசடி, தவிர்ப்பு அல்லது **வேண்டுமென்றே தவறுகை புரிதல், அத்தகைய** ஏதேனும் வங்கியினால் அல்லது நிதி நிறு**வனத்தால் அல்லது இவற்றின் சார்பில், அத்தகைய** வங்கியினால் அல்லது நிதி நிறுவனத்தால் **கழிக்கப்படற்பாலதான அத்தகைய ஏதேனும் வருமானவரி** தொடர்பில் புரியப்பட்டிருப்பதாக வரிமதி**ப்பீட்டாளர் அபிப்பிராயப்படுகின்றவிடத்து, அத்தகைய** வரிமதிப்பீட்டாண்டு முடிவுற்ற பின்னர் எந்நே**ரத்திலும், அத்தகைய வங்கி அல்லது நிதி நிறுவனத்தின்** மீது மதிப்பீடொன்று அல்லது மேலதிக **மதிப்பீடொன்று செய்வது, வரிமதிப்பீட்டாளருக்குச்** சட்டமுறையானதாதல் வேண்டும்.".

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 118ஆம் பிரிவு, அப்பி**ரிவின் (3)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப்** பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்த**ப்படுகிறது:-**

"(3) சபைக்கு, மூன்று சட்ட ஆலோசகர்**களுக்கு மேற்படாத குழுமம் ஒன்று இருத்தல் வேண்டும்.** இவர்கள் சபையினால் நியமிக்கப்படுதல் வே**ண்டும்.".**

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 161ஆம் பிரிவு, அதன் (7)ஆம் உட்பிரிவில், "பொருள்" என்பதற்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துபின்னர், பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"ஆவணம்" என்பது, தொகுக்கப்பட்ட வடிவத்தில் அல்லது எலெக்ட்ரோனிக், காந்த சக்தி அல்லது வேறு மூலத்தில் கணனி நிகழ்ச்சித்திட்டம் அல்லது தரவுகள் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும் அல்லது பதியப்பட்டிருக்கும் ஏதேனும் டிஸ்கெற், நாடா, கொம்பாக்ற் டிஸ்க் அல்லது வேறு ஏதேனும் பொருள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

30. முதன்மைச் சட்டவாக்கத்தின் 161அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்னர், பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(இஇ) அத்தகைய ஏதேனும் கட்டிடத்தில் காணப்படும் ஏதேனும் கணனியை இயக்கலாம் அத்துடன், அதில் பதிவுசெய்யப்பட்டிருக்கும் அல்லது களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும் எவையேனும் பதிவுகளின் முழுமையான அல்லது பகுதியளவிலான அச்சுப்பிரதிகளை எடுக்கலாம்;";

(2) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவு,"பொருள்" என்பதற்கான வரைவிலக்கணத்துக்குப் பதிலாக,"பொருள் மற்றும் ஆவணம்" என்பது, முறையே அவற்றுக்கு 161ஆம் பிரிவினால் குறித்தொதுக்கப்பட்ட பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்:

31. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்தாம் ஆண்டின் 27ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 163ஆம் பிரிவு "தகைமையளிக்கும் பகிர்ந்தளிப்பு" என்னும் வரைவிலக்கணத்தில், பின்வருமாறு இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பந்தியின் (1)ஆம் உட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தில் "அத்தகைய சட்டத்தின் 17ஆம் பிரிவின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் ஒன்றி பத்து வீதமாக அல்லது பதினைந்து சதவீதமாக அல்லது முப்பந்தைந்து சதவீதமாக உள்ளதுமான ஒரு வீதத்தில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(2) அவ்வரைவிலக்கணத்தின் ஆ என்னும் பந்தியில், "(ii) பிரிவு 32ஊ, பிரிவு 32ஏ அல்லது 32ஓ என்பதன் ஏற்பாடுகளுக்கிணங்க, வரிவிதிக்கப்படுமோ" என்னும் சொற்கள், இலக்கங்கள் ஆகியவற்றிலிருந்து அவ்வரைவிலக்கணம் முடியும்வரை உள்ள சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம்:-

"(ii) பிரிவு 32ஊ அல்லது பிரிவு 32ஏ அல்லது பிரிவு 32ஓ அல்லது பிரிவு 32க அல்லது பிரிவு 32ங அல்லது பிரிவு 32 ஈஈஈஈ என்பவற்றின் ஏற்பாடுகளுக்கிணங்க வரி விதிக்கப்படுமோ,

அவ்விலாபங்களான கம்பெனியின் அத்தகைய இலாபங்களிலிருந்து பணமாக அல்லது பணம் செலுத்துவதற்கான கட்டளை ஒன்றாகப் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தப் பங்கிலாபம் முழுவதும் அல்லது அதன் ஒரு பாகம் என்று பொருள்படும். ஆனால்,

(அ) அது -

(i) 1998 ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் அத்தகைய கம்பெனிக்குத் திரண்ட அல்லது சேர்ந்த இலாபங்களிலிருந்து அல்லது வருமானத்திலிருந்து;

(ii) அதன் விலக்களிக்கப்பட்ட இலாபங்களில் அல்லது வருமானத்தில் இருந்து;

(iii) அத்தகைய கம்பெனியால் பெறப்பட்ட பங்கிலாபத்திலிருந்து அல்லது வருமானத்திலிருந்து;

(iv) அத்தகைய இலாபங்கள் மற்றும் வருமானம் தொடர்பில், அத்தகைய வேறு ஆள்புலத்தில் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வருமான வரிக்காக, இச் சட்டத்தின் 33(1)(அ) என்னும் பிரிவின் கீழ் அத்தகைய கம்பெனியினால் செலுத்தப்படற்பாலதான அத்தகைய இலாபங்கள் மற்றும் வருமானம் தொடர்பிலான ஏதேனும் வருமான வரிக்கு எதிராக 82ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின் கீழ் அத்தகைய கம்பெனி வரவுகோர

உரித்துடையதாக இருந்தால், இலங்கைக்கு வெளியே ஏதேனும் ஆள்புலத்திலிருந்து அத்தகைய கம்பெனிக்குத் திரளுகின்ற அல்லது சேருகின்ற அல்லது அத்தகைய கம்பெனியால் பெறப்படுகின்ற;

(v) "பிரிவு (அஅஅஅஅ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்டனவும், எக்காலப்பகுதியின் போது, அத்தகைய இலாபங்களிலிருந்து, செலுத்தப்பட்ட பங்கலாபங்களுக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கின்றதோ, அக்காலப் பகுதியின்போதானவுமான இலாபங்களிலிருந்து அத்துடன் வருமானத்திலிருந்து, பகிர்ந்தளிக்கப்படுகின்ற;

(ஆ) எந்த ஆளுடைய இலாபங்களுக்கும் வருமானத்துக்கும் 8ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனவோ அந்த எவரேனும் ஆளுக்குச் செலுத்தப்பட்ட;

(இ) வதிவற்ற எவரேனும் ஆளுக்கு 1988 ஏப்பிறல் 1ஆம் தேதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ செலுத்தப்பட்ட, ஏதேனும் பங்கிலாபத்தை உள்ளடக்காது.

32. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான ஆறாம் அட்டவணை, "இலங்கைக்கு வெளியேயுள்ள எவரேனும் ஆளுக்கு அல்லது பங்குடைமைக்குக் கொடுக்கப்பட்ட அல்லது வரவில் வைக்கப்பட்ட வட்டி, வாடகை, நில வாடகை, அரசுரிமைப் பணம் அல்லது ஆண்டுத்தொகை" என்பவற்றிலிருந்து "கழிக்கப்படும் வருமானவரியின் வீதம் ..... 33 1/3 சதவீதம்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"இலங்கைக்கு வெளியேயுள்ள எவரேனும் ஆளுக்கு அல்லது பங்குடைமைக்குக் கொடுக்கப்பட்ட அல்லது வரவில் வைக்கப்பட்ட வட்டி, வாடகை, நில வாடகை, அரசுரிமைப் பணம் அல்லது ஆண்டுத்தொகை என்பவற்றிலிருந்து கழிக்கப்படும் வருமானவரியின் வீதம்:-

1998, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் முடிவுறும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ..... 33 1/3 சதவீதம்";

1998, ஏப்பிறல் 1ஆம் தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ முடிவுறும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ..... 20 சதவீதம்.

33. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 24ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப் பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்துக்கான ஏழாம் அட்டவணை, இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) "1997, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டிற்கும் முற்பணக்கம்பெனி வரிவீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:-" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1997, ஏப்பிறல் 1ஆம் தேதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ, ஆனால் 1997, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஒவ்வொரு மதிப்பீட்டாண்டிற்கும் முற்பணக்கம்பெனி வரி வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:-" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும்;

(2) அவ்வட்டவணையின் முடிவில் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்:-

"1998, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டிற்கும், முற்பணக் கம்பெனி வரிவீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:-

(i) விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்றால் செய்யப்பட்ட தகைமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமனான தொகைமீது -

(அ) 32ஊ அல்லது 32ஏ அல்லது 32ஒ அல்லது 32க அல்லது 32ங அல்லது 32ஈஈஈஈ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க, 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க தேசிய அரசுப் பேரவையின் இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்டுள்ள வீதமொன்றில் வரிவிதிக்கப்படும் இலாபங்கள் தவிர்ந்த இலாபங்கள் அல்லது வேறு இலாபங்களிலிருந்து

54 சதவீதம்.

(ஆ) 32ஏ அல்லது 32ஓ அல்லது 32க அல்லது 32ங அல்லது 32ஈஈஈஈ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க அல்லது 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, தேசிய அரசப் பேரவையின் இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்டுள்ளதும் அக்கம்பனிக்கு ஏற்புடைத்தானதுமான பதினைந்து சதவீதத்தில் வரி விதிக்கப்படும் இலாபங்களிலிருந்து

17 சதவீதம்.

(இ) 32ஏ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அல்லது 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க தேசிய அரசப் பேரவையின் இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்டதும், அக்கம்பனிக்கு ஏற்புடைத்தானதுமான பத்து சதவீதத்தில் வரிவிதிக்கப்படும் இலாபங்களிலிருந்து

11 சதவீதம்.

(ii) விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்றல்லாத நம்பிக்கைப் பொறுப்புக்கூறு ஒன்றினால் அல்லது பரஸ்பர நிதியத்தால் அல்லது வேறு ஏதேனும் கம்பனியால் செய்யப்பட்ட தகைமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமனான தொகைமீது–

(அ) (32ஊ அல்லது 32ஏ அல்லது 32ஓ அல்லது 32க அல்லது 32ங என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அல்லது 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, தேசிய அரசப் பேரவையின் இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட வீதத்தில் வரிவிதிக்கப்படும் இலாபங்கள் தவிர்ந்த) இலாபங்கள் அல்லது வேறு இலாபங்களிலிருந்து

27 சதவீதம்,

(ஆ) 32ஏ அல்லது 32ஓ அல்லது 32க அல்லது 32ங அல்லது 32ஈஈஈஈ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க அல்லது 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, தேசிய அரசப் பேரவையின் இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்டதும் அக்கம்பெனிக்கு ஏற்புடைத்தானதுமான பதினைந்து சதவீதத்தில் வரிவிதிக்கப்படும் இலாபங்களிலிருந்து

8 சதவீதம்,

(இ) 32ஊ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க அல்லது 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, தேசிய அரசப் பேரவையின் இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்டதும், அக்கம்பெனிக்கு ஏற்புடைத்தானதுமான பத்து சதவீதத்தில் வரிவிதிக்கப்படும் இலாபங்களிலிருந்து

5 சதவீதம்,

34. (1) இச்சட்டத்தின் 2(2) அத்துடன் 2(3)ஆம் பிரிவுகளினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தமானது எல்லா நோக்கங்களுக்காகவும் 1996 திசெம்பர் 1ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(2) இச்சட்டத்தின் 17(2)ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 31அ என்னும் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்காவும், 1996 நவெம்பர் 6ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் 14ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 29ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும், 1997 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் 21ஆம் பிரிவின் ஏற்பாடுகள், எல்லா நோக்கங்களுக்காகவும், 1997 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) (i) இச்சட்டத்தின் 3(2)ஆம் பிரிவிலிருந்து 3(4)ஆம் பிரிவு வரையுள்ள பிரிவுகளினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 9ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம்;

(ii) இச்சட்டத்தின் 6ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 14ஆம் என்னும் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம்;

(iii) இச்சட்டத்தின் 8ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஒஒ பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம்;

(iv) இச்சட்டத்தின் 9ஆம் பிரிவினால் 17ஓஓ என்னும் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம்;

(v) இச்சட்டத்தின் 12(1)(ஆ) என்னும் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம்;

(vi) முப்பத்தோராம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் (ந) என்னும் பந்தியில் உட்குத்தப்பட்டது தவிர்ந்த இச்சட்டத்தின் 16ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட வேறு திருத்தம்.

எல்லா நோக்கங்களுக்காகவும் 1997 நவெம்பர் 6ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) இச்சட்டத்தின் முறையே 2(1), 15 மற்றும் 19ஆம் பிரிவுகளினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 8, 30 மற்றும் 32ஈஆம் பிரிவுகளுக்குச் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும், 1996 சனவரி 1ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) (i) இச்சட்டத்தின் 4ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவுக்கு;

(ii) இச்சட்டத்தின் 7ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 15ஆம் பிரிவுக்கு;

(iii) இச்சட்டத்தின் 11ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஈஎன்னும் பிரிவுக்கு;

(iv) இச்சட்டத்தின் (உட்பிரிவு (1)இன் (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகள் தவிர்ந்த) 12ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஆம் பிரிவுக்கு;

(v) இச்சட்டத்தின் 13ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ஆம் பிரிவுக்கு;

(vi) இச்சட்டத்தின் 17(1) மற்றும் 17(3)ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 31அ என்னும் பிரிவுக்கு;

(vii) இச்சட்டத்தின் 31ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 163ஆம் பிரிவுக்கு;

(viii) இச்சட்டத்தின் முறையே 32 மற்றும் 33ஆம் பிரிவுகளினால் ஆறாம் அட்டவணைக்கும் ஏழாம் அட்டவணைக்கும்;

செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 1998, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்."

(8) இச்சட்டத்தின் 20ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எல்லா நோக்கங்களுக்காகவும் 1998 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

35. இச்சட்டத்தின் சிங்கள மற்றும் தமிழ் உரைகளிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

1998ஆம் ஆண்டின் 61ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம்

1999ஆம் நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய சேவையின் நோக்கத்திற்காக இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும், அந்நிதியாண்டின்போது அரசாங்கத்தின் குறித்த சில முயற்சிகள் தொடர்பில் நிதியேற்பாடு செய்வதற்கும், அத்தகைய முயற்சிகளின் செலவினத்திற்கு அந்நிதியாண்டின்போது தேவைப்படும் பணங்களைத் திரட்டுநிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணமாகக் கொடுப்பதை இயலச் செய்வதற்கும், திரட்டுநிதியத்திற்கு அத்தகைய பணங்களை மீளளிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும், அத்துடன் மேற்சொல்லப்பட்ட கருமங்களுடன் தொடர்பான அல்லது அவற்றின் இடைநேர்வினைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

1. இச்சட்டம் 1998ஆம் ஆண்டின் 61ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) இச்சட்டத்தில் "நிதியாண்டான 1999ஆம் ஆண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும், 1999 சனவரி 01ஆந் தேதி தொடங்கி 1999 திசெம்பர் 31ஆந் தேதியன்று முடிவடைவதுமான காலப்பகுதிக்கான சேவைக்காக இருபத்து நாலாயிரத்து இருநூற்று அறுபத்தெட்டுக் கோடியே தொண்ணூற்றிரண்டு இலட்சத்து பதினொராயிரம் ரூபாவென மதிப்பிடப்படும் அரசாங்கத்தின் செலவினத் தொகையானது செலவினம் எதற்கும் அதிகாரமளிக்கும் வேறு சட்டமெதற்கும் பங்கமின்றி –

(அ) திரட்டுநிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்தின் அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து வழங்கப்பட வேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளிலிருந்தும்; அத்துடன்

(ஆ) அரசாங்கத்திற்காகவும் அதன் சார்பிலும் இலங்கையிலோ வெளிநாட்டிலோ திரட்டப்பட வேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கடன்களின் வரும்படியிலிருந்தும் பெறப்படல் வேண்டும். எவ்வாறாயினும் அத்தகைய வரும்படியில் கூட்டு மொத்தத் தொகையானது ஒன்பதாயிரத்து எழுநூற்றி இரண்டு கோடியே எழுபது இலட்சம் ரூபாவினை விஞ்சுதலாகாது. இதன்கண் முன்னர் குறிப்பிட்ட இருபத்து நாலாயிரத்து இருநூற்று அறுபத்தெட்டுக் கோடியே தொண்ணூற்றிரண்டு இலட்சத்து பதினொராயிரம் ரூபா கொண்ட பணத்தொகை இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு செலவிடப்படலாம்.

(2) இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அரசாங்கத்துக்காகவும், அதன் சார்பிலும் கடன் திரட்டுவதற்கு அதிகாரமளிக்கும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி பயனுடையனவாதல் வேண்டும்.

3. (1) நிதியாண்டான 1999ஆம் ஆண்டின்போது, இச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் Iஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியிலிருந்தும் அரசாங்கம் பெறும் பெறுகைகள் அத்தகைய முயற்சியின் கணக்கிற்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும். ஆனால், ஆனால் அவ்வாறு வரவுவைக்கப்படும் பெறுகைகளின் கூட்டுமொத்தத் தொகையானது, அந்த அட்டவணையின் IIIஆம் நிரையில் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்குறைந்த எல்லையை விஞ்சுதலாகாது. அத்தகைய முயற்சியின் தேறிய மிகை ஏதேனும் இருப்பின் அத்தேறிய மிகையானது நிதியாண்டான 1999ஆம் ஆண்டு முறுவுற்ற பின்னர் ஆறு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் திரட்டுநிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழான தேறிய மிகையைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காகப் பின்வரும் கட்டணங்கள், அவையாவன:-

(அ) முயற்சியினது வருமானத்திற்கு முறைப்படி பொறுப்பாக்கப்படற்பாலனவான, கொடுக்கப்பட்டனவாயினுஞ்சரி அல்லது சேர்மானமானவையாயினுஞ்சரி, முயற்சியினது தொழிற்பாட்டு, தாபன மற்றும் ஏனைய செலவுகள்; அத்துடன்

(ஆ) முயற்சியினது அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான சொத்தினது தேய்மானத்தை மேவுவதற்கான ஏற்பாடு என்பன

ஒவ்வொரு முயற்சியின் வருமானத்திலும் எதிரீடு செய்யப்படல் வேண்டும்.

(3) நிதியாண்டான 1999ஆம் ஆண்டின்போது இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் Iஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியின்பேரிலும், அரசாங்கத்தால் உறப்படும் செலவினம், அந்த நிதியாண்டின்போது அத்தகைய முயற்சியிலிருந்து, அரசாங்கம் பெறும் பெறுகைகளிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும். ஆனால், அத்தகைய செலவினம் அந்த அட்டவணையின் IIஆம் நிரையில் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லையை விஞ்சுதலாகாது.

(4) நிதியாண்டான 1999ஆம் ஆண்டின் முடிவில், இச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் Iஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் முயற்சியிலிருந்து நிலுவையாகவுள்ள பற்றுமீதி, அந்த அட்டவணையின் IVஆம் நிரையிலுள்ள நேரொத்த் பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய எல்லையை விஞ்சுதலாகாது. அத்துடன் அந்த நிதியாண்டின் இறுதியில் அந்த முயற்சியின் மொத்தப் பொறுப்புக்கள் அந்த அட்டவணையின் Vஆம் நிரலில் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் ஆகக்கூடிய எல்லையை விஞ்சுதலாகாது.

4. நிதியாண்டான 1999ஆம் ஆண்டின்போது எப்போதேனும் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் Iஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் முயற்சியிலிருந்து அரசாங்கம் பெறும் பெறுகைகள், அத்தகைய முயற்சியின்மீது அரசாங்கத்தினால் உறப்பட்ட செலவினங்களைச் சமாளிப்பதற்குப் போதியனவாயிராவிடின் அமைச்சர், அத்தகைய செலவினத்திற்கு அவசியமென அவர் கருதும் அத்தகைய தொகைகள் முற்பணங்களாகத் திரட்டுநிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்கு சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து கொடுக்கப்படற்பாலதாதல் வேண்டுமெனக் காலத்துக்குக்காலம் கட்டளை மூலம் பணிக்கலாம்: எவ்வாறாயினும், அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்படும் பணத்தொகைகளின் கூட்டுமொத்தத் தொகை, அந்த அட்டவணையின் IIஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள செலவினங்களின் ஆகக்கூடிய எல்லையை விஞ்சாதிருத்தல் வேண்டும். அததகைய முயற்சி தொடர்பில் அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை அமைச்சரால் கட்டளைமூலம் பணிக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் திரட்டுநிதியத்திற்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்.

5. (1) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, அந்த அட்டவணையில் ஏறித்துரைக்கப்பட்டுள்ள எந்தத் தலைப்பின்கீழும் தோன்றும் எந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழும் மீண்டுவருஞ் செலவினத்திற்குக் குறித்தொதுக்கப்பட்டிருந்து, ஆனால் செலவு செய்யப்படாமலும் அல்லது செலவுசெய்யப்படுதல் சாத்தியமில்லாமலும் இருக்கும். எவையேனும் பணங்கள், திறைசேரிச் செயலாளரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலரின் கட்டளைமூலம் அந்நிகழ்ச்சித்திட்டத்திற்குட்பட்ட ஆக்கப்பொருட் செலவினத்துக்கென செய்யும் குறித்தொதுக்கலுக்கு அல்லது அத்தலைப்பிற்குட்பட்ட வேறேதேனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான மீண்டுவருஞ் செலவினத்தின அல்லது மூலதனச் செலவினத்தின் குறித்தொதுக்கலுக்கும் கைமாற்றப்படலாம்.

(2) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தலைப்பின்கீழுள்ள நிகழ்ச்சித்திட்டம் எதன்கீழும் ஆக்கப்பொருட் செலவினத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ள பணங்களெவையும் பிரித்தொதுக்கலில் இருந்து கைமாற்றப்படல் ஆகாது)

6. (அ) வரிகளிலிருந்தும் வேறு மூலங்களிலிருந்துமம பெறப்படும் பெறுகைகள், அதிகாரமளிக்கப்பட்ட செலவினங்களுக்கு நிதிவசதியளிப்பதற்கு என எதிர்பார்க்கப்பட்ட பணத்தொகைகளையும் விடக் குறைவாக இருக்குமென, அல்லது

(ஆ) ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கு அல்லது நோக்கங்களுக்கு முதலில் ஒதுக்கப்பட்ட பணத்தொகைகள் மேலும் தேவைப்படமாட்டாதென, அமைச்சர் திருப்திப்படுமிடத்து, திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சேர்ந்த ஏதேனும் பிற நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து அவரால் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரத்தில் அதிகாரத்தின்கீழான செலவினத்துக்காக முன்னர் வழங்கப்பட்ட எவையேனும் பணத்தொகைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் முழுமையாக அல்லது பகுதியளவில் அவர் மீளப்பெறலாம்.

7. (1) (அ) இச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் IIஆம் நிரையிலும் IVஆம் நிரையிலும் Vஆம் நிரையிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள, ஆகக்கூடிய எல்லைகளுள் எதனையும்:

(ஆ) இச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் IIIஆம் நிரையிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்குறைந்த எல்லைகளையும்;

அமைச்சர் அரசாங்கத்தின் அங்கீகாரத்தோடு 2000ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கட்டளைமூலம் வேறுபடுத்தலாம் அல்லது மாற்றலாம்.

(2) இப்பிரிவின்கீழ் (2)ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளை எதுவும், பாராளுமன்றத்தினாலான தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றி பயனுடையதாதல் ஆகாது.

(3) இப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட அத்தகைய கட்டளை எதுவும் அதன்கண் அவ்விதம் கூறப்பட்டிருந்தால், அதன்கண் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடியதும், அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட திகதிக்கு முந்தியதுமான அத்தகைய திகதியிலிருந்து பயனுடையதாயிருந்ததாகக் கருதப்படுதல் வேண்டும்.

8. பாராளுமன்றமானது தீர்மானத்தின் மூலம் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையை, அந்த அட்டவணையின் தோதான நிரைகளுக்கு, ஏதேனும் முயற்சியையும், அத்துடன் -

(அ) அத்தகைய முயற்சி தொடர்பான எல்லா ஆகக்கூடிய எல்லைகளையும் அல்லது அவற்றுள் எவற்றையும்,

(ஆ) அத்தகைய முயற்சி தொடர்பிலான ஆகக்குறைந்த எல்லையையும்,

சேர்ப்பதன் மூலம் திருத்தலாம்.

9. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை இருக்கும் சந்தர்ப்பத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

1998ஆம் ஆண்டின் 63ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம்

1997ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம், 1998ஆம் ஆண்டின் 63ஆம் இலக்க, ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 36ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "நூற்றுப் பதின்மூன்று பில்லியன் எண்பத்தொன்பது மில்லியன் ரூபா" என்ற சொற்களுக்குப் பதிலாக, " ஒரு இலட்சத்து இருபத்தாறாயிரம் மில்லியன் ரூபா" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

3. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.